இதன் பின்னர் மைய ஓடு நானோ கட்டமைப்புக்கள் y-$Fe^2O3$ நானோ துகள்கள் மீது சப்சினிக் அமிலத்தை உள்ளுறுஞ்சியெடுத்தல் மூலம் செயற்கையாக உருவாக்கப்பட்டன. ( இதனகத்துப் பின்னர் மைய ஓடு

நானோ துகள்கள் அல்லது மைய ஓடுகளென அழைக்கப்படும். y-$Fe^2O_3$ மைய ஓடுகள் மீது இணைப்பதற்காக மாதிரி மருந்தாக ஸ்ரெப்ரோமைசின் தெரிவு செய்யப்பட்டது. bi-dentate, bi-nuclear complex ஆக சேதன லிகன்ஸ்சுகளின் ( அதாவது சக்சினிக் அமிலம் அல்லது ஸ்ரெப்ரோமைசின்) குறித்த உள்ளுறுச்சியெடுத்ததை அதிர்வு ஸ்பெக்ரோகோப்ஸ் தரவு உறுதிப்படுத்தியுள்ளது. $Fe_6(OH)18$ (H2o)6 மற்றும் FeOH வளையத் தொகுதியைப் பயன்படுத்தி அடர்த்தி தொழிற்படு கோட்பாட்டினால் சேதன லிகன்ஸ்சுகளுக்கும் y-$Fe^2O3$ க்கும் இடையே சாத்தியமான மூலக்கூறு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அளக்கப்பட்ட அதிர்வு தடவைகளின் எண்ணிக்கையும் கணிப்புக்களுடன் நன்கு ஒத்தியல்கின்ற உச்சப்படுத்திய y-$Fe^2O3$ இன் பிணைப்பு தூரங்களும் (அதாவது Feo Fe, $FeO_w$, மற்றும் FeOH) கூறுகளும் கணிப்புக்களுடன் நன்கு ஒத்திசைந்துள்ளன.

## 7.3.4.4 அயன் தெரிவு மின்வாய்களின் அதேயிடத்திலேயுள்ள அளவிடுதலுக்காக நானோ கெயோடினைற்றிலிருந்து உலோக அயன் வேகத்தைக் குறைக்கும் கருவிகளை உருவாக்குதல்

**றொஹான் வீரசூரிய[1], மதுபாஷினி மக்கெஹெல்வெல[2]**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மணல் விஞ்ஞான துறையும்
கண்டி, தேசிய நீர் வழங்கல்கள், வடிகாலமைப்பு சபையும்

உலோக அயன்கள் இயற்கை மீது உருவாகின்றன. தொகுதியில் உள்ள உலோகங்களின் இரசாயன உருவாக்கம் சுவட்டு உலோகங்களில் கிடைக்கும் நிலையிலும் விசர்த்தன்மையிலும் தங்கியுள்ளது. உலோக அயன் இனங்களின் பரந்த வரிசையில் இருந்து செம்பு இல்லாத செப்பு நீர் லிகண்டின், $Cu(H2O)_6^{2+}$ விடயத்தில் அது மட்டுமே தடையற்ற என்பது உயிரியல் ரீதியாக செயற்பாட்டில் உள்ளது. எனினும் அநேக பரிசோதனை முறைகள் வெவ்வேறு இரசாயன இனங்களை கண்டுபிடிக்காமல் மொத்த உலோக அயன்களின் செறிவையே கண்டுபிடிக்கின்றன; இற்றை வரைக்கும் தடையற்ற உலோக அயன் செயற்பாட்டைக் கண்டுபிடிப்பதற்கு சிறந்த பரிசோதனை முறைகள் எதுவும் இல்லாமல் இருக்கின்றது. தடையற்ற உலோக அயன் செயற்பாட்டை நிர்ணயிப்பதில் கியூபிறிக் அயன் தெரிவு மின்வாய்கள் (CuISEs), பெறுமதியுள்ள பூரண பரிசோதனைக் கருவிகளாக இருக்கலாம். எனினும் உற்பத்தியாளரினால் சிபாரிசு செய்யப்படும் செய்முறை பின்பற்றப்படுமிடத்து CuISEs ஒன்றினால் கண்டுபிடிக்கப்படக்கூடிய எல்லை $10^{-6}M$ க்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது அயன் தெரிவு மின்வாயிலேயே உள்ள உள்ளார்ந்த மட்டுப்பாடு அல்ல. ஆனால் இந்தப் பிரச்சினையானது அளவை நிர்ணயிக்கும் போது வேகம் குறைக்கப்பட்ட உலோக அயன் நியமங்களின் பயன்படுத்துகை காரணமாக ஏற்பட்டுள்ளது. எமது ஆராய்ச்சி தொகுதியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த நிலைமையை வெற்றி கொள்வதற்காக செம்பு/ஈதைலீன் டையமைன் / நானோ கெயோலினைற் வேகத்தைக் குறைக்கும் கருவிகள் அதாவது en/செம்பு அயன்களை பயன்படுத்துகின்றன. Cu(II) அயன் தெரிவு மின்வாயின் நீளத்தொடர் $10^{-12}$ M அதாவது e.pCu = 12 வரை நீடிக்கப்பட்டதை நாம் காண்பித்துள்ளோம். இந்த உலோக வேகத்தைக் குறைக்கும் கருவி முறைமைகள் முழுமையாக செயற்படத் தொடங்கியவுடன் இயற்கை நீர் மாதிரிகளில் உள்ள தடையற்ற உலோக அயன் செறிவுகள் குறைந்த செலவில் அதே இடத்திலேயே மாதிரிகளை அளவிட முடியும்.

### மனிதவள அபிவிருத்தி

M.Phil. Degree : M.Makehelwala
தற்காலிக தலையங்கம் பைறைற்றினால் CI-phenols இன் உள்ளுறுஞ்சி எடுத்தல் தரத்தாழ்த்துகை, விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவகம், பட்டப் பின்படிப்பு பேராதனைப் பல்வலைக்கழகம் ( ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. - தற்போது மீளாய்வின் கீழ் உள்ளது)

PhD.Degree : L.Jayaratne
தற்காலிக தலையங்கம் y-Fe2O3 நானோ துணுக்குகளின் செயற்கை உருவாக்கமும் வளைகோடுமயப்படுத்தலும், விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ( ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.)

## 7.3.5 இலங்கையின் உலர் வலைய பிரதேசங்களில் உள்ள நீர்த்தரங்களை மேம்படுத்துதல்

**கருத்திட்ட தலைவர் :** J.P.பத்மசிறி ( இடைவருகை ஆராய்ச்சியாளர்)

**விவரணம்**

ஆரோக்கியமான சமூகமொன்றில் பாதுகாப்பான குடிநீரைப் போதிய அளவில் அணுகுவதற்காக வழியொன்று இருப்பது ஒரு முற்தேவைப்பாடாகும். தற்போது இது உயர்ந்த அளவில் அரசியல் மயப்படுத்தப்படும் விடயமாக இருப்பதுடன் கடுமையா சிறுநீரக செயற்பாடின்மை நிலவுவதற்கு இலங்கையில் கிராமிய சமூகங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் இருப்பது காரணமாக கூறப்படுகின்றது. இத்துடன் கூடுதலாக இலங்கையில் உள்ள கிராமிய சமூகமானது நிலத்தடி நீரில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இது குடிநீரில் மிகையான வன்தன்மையும் புளோரைட்டும் இருக்கும் உள்ளார்ந்த தரப்பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. இக்கருத்திட்டமானது பாதுகாப்பான குடிநீரை வழங்கும் சவால் விடுகின்ற பணியின் தீவிரத்தை குறைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ந நடவடிக்கைகளை துலாம்பரமாக எடுத்துக் காட்டியுள்ளது. இது வரை மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் பாடசாலைகளிலும் சமூகங்களிலும் கிணறுகளை பரிசீலனை செய்தல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தினால் கிராமங்களில் உள்ள சிறந்த கிணறுகளை கண்டறிவதை உள்ளடக்கியிருந்தது. நீரின் நுண் உயிரியல் தரமானது குடிப்பதற்கு சுடவைத்த நீரை பயன்படுத்துமாறு ஊக்குவிப்பதன் மூலம் மேம்படுத்தப்படலாம். இந்த அமிசமானது கிராமப் புறங்களில் குறைந்த முன்னுரிமையைப் பெறுகின்றது. எனவே பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் முழுமையாக தேவைப்பாடானதொரு விடயமாக இருக்கின்றது.

மறுபுறமாக 4,500 சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் திட்டங்கள் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது. இவற்றின் மிகையான வன்மை மற்றும் புளோரைட்டு இருப்பதன் காரணமாக குடிக்கும் நோக்கங்களுக்காக 30% நீர் மக்களினால் பயன்படுத்தப்படுவதில்லை. இந்த விடயமானது மின் உறைதல் நீர் சுத்திகரித்தல் பொறித்தொகுதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நீரில் உள்ள 90% புளோரைட்டையும் வன்மை அளவை 50% இனால் உழைப்பதன் மூலமும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. இத்தகைய இரண்டு பொறித்தொகுதிகள் 2011 ஆம் ஆண்டில் அசோக்க மாலகம, மகாவில்லாட்விலும் (அநுராதபுரம்) மற்றும் நிக்கவெவ, மொரகொல்லாகமவிலும் (குருநாகல்) நிறுவப்பட்டது. இக்கருத்திட்டம் 08 மின் மின் உறைதல் நீர் சுத்திகரித்தல் பொறித்தொகுதிகளை (200 லீற்றர்) / மணித்தியாலத்தில் அநுராதபுர மாவட்டத்தில் தொழினுட்ப, ஆராய்ச்சி அமைச்சிலிருந்து கிடைத்த நிதியங்களை கொண்டு நிறுவப்பட்டது. அரசாங்கம் சாரா அமைப்புகளிலிருந்து பெற்றுக் கொண்ட நிதியங்களிலிருந்து வவுனியா மாவட்டத்தில் மற்றும் இரண்டு நீர் சுத்திகரித்தல் அலகுகள் நிறுவப்பட்டன. இக்கருத்திட்டமானது அங்கீகரிக்கப்பட்டதுடன் நீர் வழங்கல் அமைச்சானது 2012 ஆம் ஆண்டு இப்பிரதேசங்களில் 05 அத்தகைய பொறித் தொகுதிகள் நிறுவியுள்ளது. இந்த வேலைகள் யாவும் குருநாகலில் உள்ள ஸ்பெக்ரா இன்டஷ்ரீஸ் பிறைவேற்) லிமிட்டெட் தாபனத்தின் உடன் உழைப்புடன் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்ட பதவியினர்கள்

பொறியியலாளர் W.M.ஜயவர்த்தன (தொண்டர்) , திரு பந்துல பிரேமதிலக்க தொண்டர்
நீர் சுத்திகரித்தல் பொறித் தொகுதிகளின் படம்




**தனியார் துறையினருக்கு கிடைத்த நிதியங்கள்**

A- அசோக்கமலங்கம, நொச்சியாகம
B- நிக்கவெவ, குருநாகல்
C- 2 ஏக்கர் பண்ணை, செட்டி குளம்
D- 400 ஏக்கர் பண்ணை உளுக்குளம

**தொழினுட்ப ஆராய்ச்சி அமைச்சு**

1. சிசிலச பிரஜா மூல, மஹாவில்லாச்சிய
2. சுவப்பான், பிரஜா மூல, நொச்சியாகம
3. றந்தியா பிரஜா மூல, நொச்சியாகம
4. எக்கமுத்து றந்தியா பிரஜா மூல, கலதிகுள்வேவ
5. மஹாசேன் றந்தியா பிரஜா மூல, மிஹிந்தலை
6. அறுநாலு றந்தியா பிரஜா மூல, கல்நேவ

7. இசுறு றந்தியா பிரஜா மூல, மதவாச்சி
8. சஹன றந்தியா பிரஜா மூல, பேமதுவ




Figure 1 : Electrocoagulation Unit




Figure 2 : On the Job Training




Figure 3 : Fixing Plates to the Reactors




Figure 4 : Collecting Purified Water

## 7.3.6 உயிரினப் பல்வகைமையும் பேணுதலும்

### 7.3.6.1 பிரதான உயிரியலும் பேணுகையும்

**கருத்திட்ட தலைவர் : கலாநிதி. W.P.J.Dittus** ( இடைவருகை சிரேட்ட விஞ்ஞானி)

**கருத்திட்டத்தின் விவரணம்**

இக்கருத்திட்டமானது பொலன்னறுவையில் குரங்குகள் அவற்றின் இயற்கை காட்டு வாழிடத்தில் வசிப்பது மீதான அவதானிப்பு கற்கைகள் சம்பந்தப்பட்டதாகும். நாம் பிரதான உயிர்களின் (மனிதர்களையும் உள்ளடக்கி சமூக நடக்கைக்கான உயிரியல் அடிப்படைகள் சம்பந்தப்பட்ட புதிய அறிவை நிலைநாட்டுவதை நாம் நோக்கமாகக் கொண்டுள்ளோம். நடக்கை என்பது உயிரியலின் அநேக அமிசங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. எனவே எமது இலக்கு ஒழுக்கம் சார் பிரிவுகளை கொண்டுள்ளது. உதாரணமாக பழைய வெளியீடுகள் சமூக அமைப்பு, மரபணுவியல் வாழிடவியல் மரபணு பல்வகைமை மற்றும் சுற்றாடல் மாற்றம் ஆகியவற்றுக்கிடையே உள்ள ஒன்றுக்கொன்று கொண்டுள்ள தொடர்புகளை பற்றி ஆராய்ந்துள்ளன. குறிப்பாக நாம் டார்வினின் தகுதிநிலை மக்கட் தொகை ஆகியவற்றின் மீதான அத்தகைய மாறுபாடுகளின் விளைவுகளை அளவிடுவதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம். உதாரணமாக எமது ஆராய்ச்சியானது பிரதான உயிர்களுக்கான உள்ளபடியான உயிர் அட்டவணையொன்றை நிறுவி வாழ்தல், இனப்பெருக்க வெற்றி மற்றும் பௌதிக வளர்ச்சி ஆகியவற்றில் உள்ள தனித்தனி மாறுபாடுகள் சமூக நடக்கை மீது செல்வாக்குச் செலுத்துவதை காண்பிப்பதே எமது ஆராய்ச்சியாக இருந்தது. அத்தகைய தரவுகள் தற்போதைய சமூக உயிரியல் மற்றும் கூர்ப்பு ஆதாரமற்ற அனுமானங்களை பரிசீலனை செய்து விஞ்ஞானத்திலும் பேணுகையிலும் பரந்த தொடர்பொன்றை வைத்திருப்பதன் பொருட்டு பரிசோதனை செய்தவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

செய்முறையில் சமூக கூர்ப்பின் தோற்றப்பாட்டை ஆய்வு எமது கற்கை அமைவிடத்தில் உள்ள 34 வெவ்வேறு சமூக தொகுதியினர்களுக்கிடையே பரவியுள்ள 4,000 க்கு மேற்பட்ட நபர்களை (சீவிக்கின்றவர்களும் இறந்தவர்களுமான) கண்டறிந்து உள்ளோம். மெக்காகியூ ஒவ்வொன்றுக்குமாக நாம் அதன் நடக்கை, மரபணு, வாழ்விட மற்றும் மக்கள் தொகையியல் வரலாற்றை ஆராய்ந்துள்ளோம். இத்துடன் கூடுதலாக நாம் 1500 மக்காகியூபரின் தந்தை வழி சந்ததியின் கண்டறிதலை பூர்த்தி செய்துள்ளோம். எமது முறைகள் காப்புறுதிக் கட்டணத் தொகைகளை போன்றவைகளாக உள்ளன. வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் நடக்கையினதும் சுற்றாடலினதும் மாறுபாடுகளை இணைத்தல் என்பதே எமது முறைகளாகும். இந்த நோக்கில் புள்ளிவிபர உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக எமக்கு நீடித்த காலப் பகுதிகளுடன் பெரிய மாதிரிகள் தேவைப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் நாம் பொலன்னறுவையிலுள்ள உங்களுடைய ஆராய்ச்சி அமைவிடத்தில் சாம்பல் நிறத்தையும் ஊதா நிறத்தையும் கொண்ட குரங்குகள் பற்றிய இதைப்போன்ற ஆய்வுகளை சில ஆண்டுகளுக்கு முன் செய்யத்தொடங்கியுள்ளோம்.

எமது ஆராய்ச்சியானதுஞ இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கு இயைபுள்ள செய்முறை ரீதியான பிரயோகங்களை கொண்டுள்ளது. உதாரணமாக நாம் (பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விலங்கு மருத்துவர்களின் உடனுழைப்புகளுடன்) டெங்கு காய்ச்சல் ரொக்சோபிளாஷ்மோசிஸ் கிறித்தோ ஷ்போடியம் மற்றும் ஏனைய தொற்று நோய்கள் போன்ற மனிதர்களுடைய நோய்களுக்கும் பிரதான நோய்களுக்குமிடையேயுள்ள முக்கியத்துவமான தொடர்பை காண்பித்துள்ளோம். பிறிதொரு மட்டத்தில் நாம் உள்நாட்டு சமூகங்களுக்கு இயற்கை பேணல் மற்றும் எட்டக்கூடிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். மனிதர்களுக்கும் குரங்குகளுக்குமிடையேயுள்ள மோதலை குறைப்பதில் உள்ளூராட்சி சபைகளுக்கு உதவியுள்ளோம். நாம் உயிரின பல்வகைமை செயலகத்திற்கும் சுற்றாடல் அமைச்சின் இலங்கை முலையூட்டிகளின் சமீபத்திய “தேசிய சிவப்பு நிரல் 2012” என்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளோம். இறுதியாக எமது ஆராய்ச்சியானது பொது மக்களுக்கு கல்வியூட்டுவதற்கும் இயற்கை பராமரிப்பிற்கு மனித அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு கல்வியூட்டும் முயற்சியில் உயர்தரமுள்ள ஆவணத் திரைப்படங்கள் மூலமாக எமது ஆராய்ச்சியானது ஒளிபரப்பப்பட்டுள்ளது. எமது திரைப்படங்கள் சருவதேச அரசியல் மற்றும் பொருளாதார அரங்குகளில் இலங்கைக்கு சாதகமான தோற்றப்பாட்டை வழங்கியுள்ளதுடன் இந்நாட்டிற்கு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்திழுத்துள்ளது.

ஆராய்ச்சி கூட்டிணைப்பாளர்: சுனில் குணதிலக்க

சிரேஷ்ட ஆராய்ச்சி உதவியாளர் : சமீர பத்திரத்ன
ஆராய்ச்சி உதவியாளர் : சுனில் ரத்நாயக்க
இடைவருகை உள்ளுறைபவர் : மெலிசா பெல்டர்

**உடனுழைப்பாளர்கள்**

- பேராசிரியர் ஆர்.பி.வி.ஜயந்த ராக்ஷ, ஒட்டுண்ணியியல் பேராசிரியரும் நோயியல் துறையின் தலைவரும் பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை
-
- கலாநிதி அசோக்கா தங்கொல்லை, விலங்கியல் மருத்துவ, விலங்கு சுகாதார பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்.
- பேராசிரியர் பீட்டர் நிவேர்ண் பேர்க் ஜினோனிக்ஸ் இற்கான ஹோலோன் சென்டர் கோலோன் பல்கலைக்கழகம், ஜேர்மனி

**மனித வள அபிவிருத்தி**

கல்வித் திணைக்களத்தின் உடனுழைப்புடன் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையே சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வையும் இயற்கைக் கல்வியையும் ஊக்கவிப்பதன் பொருட்டு 2012 ஆம் ஆண்டு 300 கிட்டத்தட்ட மாணவர்களுக்கு நாம் ஆறு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியுள்ளோம்.

- சிமித்சோனியன் வெளிக்கள ஆராய்ச்சி நிலைய காட்டு காணித்துண்டையும் றோயல் கல்லூரி (பொலன்னறுவை) இயற்கை நிலையத்தையும் யூன் 23 ஆம் திகதி யூலை 7 ஆம் திகதி யூலை 28 ஆம் திகதி ஆகத்து 15ஆம் திகதி செப்பெரம்பர் 26 ஆம் திகதி செப்ரெம்பர் 29ஆம் திகதி ஆகிய நாட்களில் அமர்வொன்றுக்கு கிட்டத்தட்ட 50 மாணவர்கள் ஆசிரியர்களும் என்ற வீதத்தில்.
- ஏறத்தாள150 மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கும் 2012 செப்ரெம்பர் 7 ஆம் திகதியன்று றோயல் கல்லூரியில் (பொலன்னறுவை) "இயற்கை ஆவணமொன்றை எவ்வண்ணம் உருவாக்கலாம்" என்பதன் மீது கருத்திட்டப் பதவியினர்களாலும் BBC திரைப்பட ஆளணியினர்களாலும் செய்முறை மற்றும் விரிவுரை முன்வைப்பு செய்யப்பட்டது.

**மாநாடுகளும் விரிவுரைகளும்**

- குரங்குகளுடனான பிரச்சினைகள் "கட்டுக் கதைகளும் தீர்வுகளும்" என்பது மீது இலங்கை காட்டுச் சீவராசிகள் இயற்கை பாதுகாப்பு சங்கத்தில் 2012 மார்ச் 15 ஆம் திகதி டபிள்யு டிற்றஸினால் மாற்றப்பட்ட விரிவுரை
- "இலங்கையின் முதனிலையாளர்கள் " மற்றும் "குரங்கு கல்வி சுற்றுலாக்களும் நிகழ்ச்சித் திட்டங்களும் பற்றி இலங்கை தேசிய சுற்றுலா வழிகாட்டல்களும் விரிவுரையாளர்களும் நிறுவகத்தில் 2012 ஒக்ரோபர் 20 ஆம் திகதியன்று டபிள்யு டிற்றஸ் ஆற்றப்பட்ட விரிவுரை.

## 7.4 உணவு விஞ்ஞானம் மற்றும் போஷணை

### கருத்திட்டத் தலைவர்: கலாநிதி. ருவினி லியனகே (ஆராய்ச்சி இணையுரிமையாளர்)

### கருத்திட்ட விவரணம்

இந்தக் கருத்திட்டமானது 2011, ஜனவரி மாதம் தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. இந்தக் கருத்திட்டத்தின் நோக்கானது இலங்கை வாழ் மக்களின் போஷணை தரத்தை மேம்படுத்தலாகும். இயற்கையாக இலங்கையில் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் வளங்களினூடாக பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதே பிரதான நோக்கமாகும் இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக வேறுபட்ட உணவுகள் அதுபோன்று உடலில் வேறுபட்ட வகையான உணவு முறைகளால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் மற்றும் போஷணை மிகு உணவு, உடல் நலன் இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு ஆகியவை தொடர்பான விடயங்கள் உள்ளடங்கும். தற்போது இலங்கையானது போஷணைத் தொடர்பில் இரு பிரதான பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கிறது. அவையாவன வருமானப்பகிர்வு மற்றும் கல்வியியல் பின்னணி. குறைவருமானத்தை பெறும் வகுப்பினரிடத்தே நிலவும் பிரச்சினை என்னவெனில், கர்பிணித்தாய்மாரும் மற்றும் பிள்ளைகளும் போஷணை இன்மையால் வாடுவதே ஆகும். மறுபுரம் நோக்குமிடத்து நகர்புரங்களில் வாழும் நடுத்தர மற்றும் உயர் வருமாணம் பெறுவோரிடத்தே நிலவும் பிரச்சனை, அவர்களின் உணவு பழக்கவழக்கத்துடன் தொடர்புடைய நோய்களாகும். இந்நோய்களுக்கு உதாரணமாக அளவுக்கு மீறிய அளவில் உடல் எடை அதிகரித்தல், நீரிழிவு, *hypercholesterolemia,* என்பனற்றைக் கூறலாம். போஷனையற்ற கர்பிணித்தாய்மார் மற்றும் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் சிறந்த தீர்வானது, ஏற்கனவே எமது நாட்டில் நிலவும் போஷனணப் பகுதிகள் உள்ளடங்கிய உணவுப் பொருட்களை உட்கொள்ளுவதன் பெற்றுக்கொள்ளலாம். இந்த அடிப்படையில் சிறந்த போஷனணக்கூறுகள் உள்ளடங்கிய முருங்கை இலைகள் மற்றும் *Spiruling platensis* என்பனவற்றைக்கூறலாம். இவை புரதம் மற்றும் நுண்போஷனணகள் இல்லாது ஏற்படக்கூடிய குறைப்பாடுகள் என்பனவற்றால் உடலில் ஏற்படக்கூடிய போஷனண இல்லாத் தன்மைகளுக்கு ஒரு தீர்வாகின்றது. இவ்விடயம் தொடர்பில் சிறந்த பகுப்பாய்வினை பெறும்பொருட்டு அதாவது நுண்போஷணை மற்றும் புரதம் இல்லாத நிலைக்கு முருங்கை இலை ஒரு தீர்வாக அமையுமா என்பதைக்கண்டறியும் பொருட்டு இலங்கையில் எட்டு வித்தியாசப்பட்ட மாவட்டங்களில் இருந்து முருங்கை இலையை சேகரித்து முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சியின் பெறுபேறானது புரதம் மற்றும் நுண்போஷணை இல்லாத ஒரு நிலைமையில் இருக்கும் இலங்கை வாழ் மக்களுக்கு முருங்கை இலை ஒரு தீர்வாக அமையும் என்பதை உறுதிப்படுத்தியது. மேலும் அடிப்படை கற்கைகள் நிறுவகத்தில் அறர - வெகுஜன வளர்ப்பானது புரதம், நுண்போஷனை மற்றும் ஒக்சியேற்றவெதிரி என்பனவற்றின் சிறந்த மூலகமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுவாக உட்கொள்ளப்படும் கௌபி என்னும் தானிய வகையில் *hypocholestaerolemic* யினது உள்ளடக்கத்தை சோதிப்பதற்கு இன்னுமொரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. பெற்றுகொள்ளப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் கவனிக்கப்பட்டதாவது ஆய்வில் கட்டுப்பாட்டு உணவு வழங்கப்பட்ட எலிகளுடன் ஒப்பிடுகையில் பொம்பே மற்றும் M135 வழங்கப்பட்ட எலிகளில் நீர்பாயம் கொழுப்பு குறிப்பிடத்தக்களவு குறைந்திருந்தமையாகும். இந்த சோதனையானது பேராதெனிய பல்கழைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞான திணைக்களத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்டது.

**ஆராய்ச்சி நிபுணர்:** பேராசிரியர். எஸ்.ஏ.குலசூரிய
**ஆராய்ச்சி உதவியாளர்:** திருவதி. ஓ.எஸ். பெரேரா
நிஷாந்த்த விஜயசூரிய (தே.வி.ம.மாணியம்)
**சிரேஷ்ட தொழில்நுட்ப பதவியணி அலுவலர்:** திருவதி. இரங்கனே தும்பலே






**முருங்கையிலைப் பொடி** *Spirulina platensis* **வளர்ப்பு**

### 7.4.1 Cowpea (*Vigna unguiculata* L. Walp) Incorporated experimental diets modulate the serum lipid profile and caecal microflora in Wistar rats (*Rattus norvegicus*)

**மேற்கூறப்பட்ட இந்த ஆராய்ச்சியானது கண்டியில் ஹந்தானை வீதியில் அமைந்துள்ள அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தில் உணவு விஞ்ஞான கருத்திட்டத்தையும் மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞான திணைக்களத்தையும் மற்றும் இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் விவசாயவியல் பீடத்தைச் சார்ந்த**
**இடான் ட. பெரேரா, லக்மினி வதுரஆராச்சி, ஒஷினி பெரேரா, என்.விஜயசூரிய, பரணா சி. ஜயவர்தன, ஜானக கே. வித்தானஆராச்சி மற்றும் ருவினி லியனகே ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டது.**

**அறிமுகவுரை**

கௌபி (*Vigna unguiculata* L. Walp) இலங்கையின் பாவிக்கப்படும் பிரதான தானிய வகைகளில் ஒன்றாகும். முழு கௌபி விதைகளாவன காபோவைதரேற்று, கனிமங்கள் மற்றும் சுவடு கூறுகள் என்பனவற்றுடன் ஒக்சியேற்றவெதிரி உள்ளடங்கலாக புரதம், முக்கிய உயிர்ச்சத்துக்கள் சமீபாட்டிற்கு உதவும் நார்ச்சத்து, தாவர – போஷணை என்பனவற்றை வழங்கும். (Moses). அண்மைக்காலங்களில் மக்களுக்கு ஏற்படக்கூடிய இருதய நோய்களை தடுப்பதற்கும் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கும் ஒரு கருவியாக குறைவான பிளாஸ்மா கொழுப்பு செறிவுள்ள உணவுவகைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்றது. (Frota et al..,2008). உயர் கொழுப்பினைக் கொண்ட உணவு வழங்கப்பட்ட Wistar எலிகளில் உள்ள நீர்பாய இலிப்பிட்டு மற்றும் பெருங்குடற்குடா பக்ரீரியா என்பவை தொடர்பில் நான்கு வகையான கௌபிகளின் தாக்கத்தை சோதிப்பதற்கு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

**திரவியங்களும் முறைகளும்**

முப்பத்தாறு கிழமைகள் முதிர்ச்சியுற்ற Wistar ஆண் எலிகளாவன எழுந்தமாறியாக 6 வகுதிகளாக 6 நகலாக்களுடன் பிரிக்கப்பட்டன இவை தனித்தனியே உலோகக் கூண்டுகளில் அடைக்கப்பட்டன. ஏழு நாட்களைக்கொண்ட காலநிலையிணக்க காலப்பகுதிக்குப்பின்பு மனம் விரும்பியபடி சோதனை உணவு இவைக்கு வழங்கப்பட்டன AIN – 93G அரை சுத்திகரிக்கப்பட்ட விலங்குணவிற்கு ஏற்ப சோதனை உணவானது தயாரிக்கப்பட்டது (Reeves et al..,991) அத்துடன் உயர்கொழுப்பு கூடிய உணவினை (HFD) பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட சோதனை உணவுடன் பன்றிக் கொழுப்பும் சேர்க்கப்பட்டது. பேணுகைகளாவன., HFD உடன் தயிர் நீர்பொடி 20% (CNF), HFD உடன் வருணிகௌபி பொடி 20% (WAF), HFD உடன் 20% பொம்பே கௌபி பொடி (BBF), HFD உடன் 20% தவலா கௌபி பொடி (DAF), HFD உடன் M135 கௌபி பொடி 20% (MIF) மற்றும் NFD (கொழுப்பற்ற உணவு) இதனுடன் 20% தயர் நீர்பொடி என்பனவாகும். உடம்புப் பருமனும் உணவு உட்கொள்ளுதலும் கிழமைதோறும் பதிவுசெய்யப்பட்டன. தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு எலி என்ற அடிப்படையில் அவற்றின் மலச்சடப்பொருள் சேகரிக்கப்பட்டு கடைசி கிழமை அது நிறுக்கப்பட்டது ஆறு கிழமைக்குப்பின்பு சகல எலிகளும் பலிகொடுக்கப்பட்டு விரைவாக அவற்றின் இரத்தம் சேகரிக்கப்பட்டது. ஈரல், சிறுநீரகம், வயிறு என்பனவற்றில் இருக்கின்ற கொழுப்பானது கூறுபடுத்தப்பட்டு நிறுக்கப்பட்டது. *Lactobacalli, total anaerobes* மற்றும் coliforms பக்ரீரியா என்பன cecal என்பதன் உள்ளடக்கத்தில் எண்ணப்பட்டன. TDX முறைமைக்கும் ஈரல் ஒக்சியேற்றவெதிரி செயற்திறமை என்பனவற்றிற்கான மதிப்பீட்டு கருவிகளைப் பயன்படுத்தி நீர்பாய இலிப்பிட்டின் பக்கத்தோற்றமானது பகுப்பாய்வு செய்யப்பட்டது. (aoac 2005) anova என்னும் ஒருமுறையினைப்பயன்படுத்தி தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் டங்கன்ஸ் பெருக்கல் ரங் சோதனையை பயன்படுத்தி அவை பிரித்தறியப்பட்டன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

CNF உணவு வகைகள் வழங்கப்பட்ட எலிகளுடன் ஒப்பிடுகையில் BBF மற்றும் MIF உணவு வகைகள் வழங்கப்பட்ட நீர்பாய கொழுப்பு TC, HTL அல்லாத கொழுப்பு (LDL - C) மற்றும் ..... (TG) என்பனவற்றின் செறிவு மிகக் குறைவாகும். அடுத்து DAF மற்றும் MIF உணவு வகைகள் வழங்கப்பட்ட எலிகளினை CNF வழங்கப்பட்டுள்ள எலிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் முன்பு கூறப்பட்ட எலிகளில் LACTOBICILLI ன் எண்ணிக்கை அதிகமாகும்.







உரு 1. ஆறு கிழமைகளுக்கு சோதனை உணவு வழங்கப்பட்ட எலிகளில் சீரம் இலிப்பிட்டு.

உரு 2. ஆறு கிழமைகளுக்கு சோதனை வழங்கப்பட்ட எலிகளில் CAE CAL பக்ரீரியாவின் எண்ணிக்கை.

## முடிவு

கௌபி உள்ளடக்கப்பட்ட சோதனை உணவானது wistar எலிகளில் நீர்பாய இலிப்பிட்டு வளர்சிதை மாற்றம் மற்றும் Cecal நொதிக்கவைப்பு என்பனவற்றில் பண்பேற்றியது.

## மேற்கோள்கள்

1. புரக்டா, KMG, Mendonaca, s. சல்தீவா, P.H.N. குரூஸ், R.J அத்துடன் Ar^Eas, J. A. G. (2008). கொலஸ்ரோலைக் குறைக்கும் ஆக்கக்கூறுகள் மற்றும் Hamsters என்பன.

2. P.G. நீல்சென்ஸ், F.H பாகி, G. C. J. (1993). AIN-93 ஆய்வுகூட விலங்குகளுக்காக சுத்தமாத் தயாரிக்கப்பட்டவை.



எலி ஆய்வு



கூறுபடுத்துவதற்கு தயாராகும் எலி



இரத்தமாதிரிகளை பெற்றுகொள்ளல்



அங்கிகளை பிரித்தல்



இரத்தமாதிரிகளின் பகுப்பாய்வு



நுண் உயிரியல் ஆய்வுக்கு வளர்ப்பு

## 7.4.2 இலங்கையில் வேறுபட்ட விவசாயக் காலநிலையுள்ள பிரதேசங்களில் இருந்து பெற்றுக்கொண்ட *Moringa oleifera* (முருங்கை இலைகள்) உள்ள நுண்போஷணை உள்ளடக்கம்

**ஓ. எஸ். பெரேரா, ஆர். லியனகே, எஸ். குலசூரிய**

*உணவு விஞ்ஞானம் மற்றும் போஷணைக் கருத்திட்டம், அடிப்படை கற்றைகள் நிறுவகம், ஹன்தானை வீதி, கண்டி.*

### பிரித்தெடுப்பு

நுண்போஷணை, போஷணையின்மை விசேடமாக இரும்பு, நாகம் மற்றும் கல்சியம் குறைபாடுகள் என்பன பிள்ளைகளிடத்தும் மற்றும் கர்பிணித் தாய்மார்களிடத்தும் இல்லாதது தற்போது இலங்கையை பொறுத்தவரையில் ஓர் பெரிய சுகாதார பிரச்சனை நிலவுகிறது. பல்நோக்கிற்காக பயன்படுத்தக்கூடியதாகவும் வறள்வலயத்தாவரமாகவும் இருக்கின்ற முருங்கையானது அதற்குள் உள்ளடங்கியுள்ள போ|ஷணை ஆக்கக்கூறுகளினிமித்தம் சரியான முறையில் அங்கீகரிக்கப்படாது இருக்கின்றது. அண்மித்த ஆய்வுகளின் பெறுபேறுகள் கூறுவது நுண்போஷணைக்குறிய சிறந்த தீர்வு முருங்கை என்பதாகும், என்பதுடன் இது விசேடமாக கர்ப்பக்காலத்திலும் பாலூட்டும் காலத்திலும் மிகத் தேவையானதாக அமைகின்றது. எவ்வாறாயினும் முருங்கையில் உள்ளடங்கியுள்ள நுண்போஷணையின் அளவைக் கண்டுபிடிப்பதற்கு எதுவித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வின் நோக்கானாது இலங்கையில் வேறுபட்ட எட்டு பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட முருங்கையிலையில் உள்ள கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு மற்றும் நாகத்தின் அளவினைக் கடைபிடித்தலே ஆகும். சேகரிக்கப்பட்ட மாதிரிகளாவன உலர வைக்கப்பட்ட பொடியாக்கப்பட்டு நுண் அலை செரிமானம் செய்யப்பட்டு சுவாலை அணு உறிஞ்ல் நிறமாலை மானியினூடாக (FAAS) ஒவ்வொரு மூலக நியமத்திற்கும் எதிராக பகுப்பாய்வு செய்யப்பட்டது. இரும்பு. நாகம், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் (ஒவ்வொன்றும் 100 கிராம் உலர் பொடி) ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இவற்றிலிருந்த உள்ளடக்கமானது முறையே 6-26 மில்லிகிராம், 1-5 மில்லிகிராம், 1100-1600 மில்லி கிராம், 1600-2400 மில்லிகிராம், மற்றும் 290-818 மில்லி கிராம் ஆகும். ஏனைய பிரதேசங்களிலிருந்து பெற்ற முருங்கை இலைகளுடன் ஒப்பிட்டு நோக்கின் பொலநறுவை மாவட்டத்தில் இருந்து பெற்றுக்கொண்ட முருங்கை இலைகளில் இரும்பு, நாகம், பொட்டாசியம் என்பனவற்றின் உள்ளடக்கமானது உயர் பெறுமானத்தைக் ($p \leq 0.05$) காட்டியது.

**பிரதான சொற்கள்:** இலைகள், குறைபோஷணை, நுண்போஷணை, *Moringa oleifer,* இலங்கை.

## 7.4.3 *Spirulina patensis* இல் உள்ள போஷணை இயல்புகள்

**சி.ஜயதிலக்க, ஓ.பெரேரா, ஆர்.லியனகே, எஸ்.ஏ. குலசூரிய**

*உணவு விஞ்ஞானம் மற்றும் போஷணைக் கருத்திட்டம், அடிப்படை கற்றைகள் நிறுவகம், ஹன்தானை வீதி, கண்டி.*

சிக்கலான வாழ்க்கைப்பாணி மற்றும் உணவுப் பழக்க நடத்தை என்பன அநேகமானவர்களை உணவுப் பிரதீயீடு செய்யப்படுவதற்கு பயன்படுத்தப்படும். ***Spirulina patensis*** இல் உள்ள போஷனை சிகிச்சை அளிப்பிற்கு உதவல் மற்றும் நிதியியல் காரணங்கள் ஆகிய விடயங்களினால் இது உலகெங்கும் வாழும் மக்களிடையே பிரபல்யமடைந்துள்ளது. இந்த அடிப்படையில் தற்போது முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வானது அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் பச்சை வீடுகளில் வளரும் இந்த ***Spirulina patensis*** பற்றியதாகும். இதன் நோக்கானது இவற்றின் அண்ணளவான சேர்மானத்தில் K, Ca, Fe மற்றும் Zn என்பனவற்றின் பினாயில் உள்ளடக்கத்தில் பண்பறியச்செய்தல். அண்ணளவான சேர்மானத்தின் மதிப்பீடானது A.O.A.C., 2010 செயன்முறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டது. நுண்போஷனை: அணு உறிஞ்சல் நிறமாலைமானி அளவீடுகளைத் தொடர்ந்து நுண் அலை செறிமானத்தைப் பயன்படுத்தி K, Ca, Fe மற்றும் Zn என்பன பண்பறியப்பட்டன. ஒக்சியேற்றவெதிரி செயற்பாடானது 2,2-diphenyl-1-1-picrylhydrazyl radical (DPPH) மதிப்பீடுகளையும் மற்றும் butylated hydroxyl toluene (BHT) இணையும் நியமங்களாகப் பயன்படுத்தி தீர்மானம் செய்யப்பட்டது. மொத்த பினாயல் உள்ளடக்கமானது Gallic அமிலத்தை நியமமாகவும் மற்றும் foiln-ciocalteu (FC) சோதனைப்பொருளை பயன்படுத்தி

பண்பறியப்பட்டது. UV- தென்படத்தக்க நிறமாலைமானியானது ஒக்சியேற்றவெதிரி செயற்பாட்டையும் மற்றும் மொத்த பினாயல் உள்ளடக்கத்தையும் பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்பட்டது. *S. platensis* உள்ளடக்கமானது 11.43 ± 0.15% ஈரப்பதன், 13.00 ± 0.50% சாம்பல், 12.58 ± 0.80% பண்படுத்தாத கொழுப்பு, 0.78 ± 0.02% பண்படுத்தாத நார்கள் 60.01 ± 0.24% பண்படுத்தாத புரதம் என்பனவற்றைக் கொண்டுள்ளது. நைதரசன் அகற்றப்பட்ட நிலையானது 2.13% என கணிப்பிடப்பட்டது. இது உலர் நிலையில் மி.கி/ 100கி, 13.52 ± 0.77 K, 1.68 ± 0.12 Ca, 1.44 ± 0.22 Fe மற்றும் 0.023 ± 0.02 Zn என்பனவற்றை அதன் பெறுமானங்களாகக் கொண்டுள்ளது. *S. platensis* ஆனது 375 மி.கி/மி.லீ இன் IC 50 பெறுமானததுடன் DPPH ற்கு எதிராக உயர் நிறுத்தற் நடவடிக்கையை வெளிப்படுத்துவதுடன் அதன் மொத்த பினாயல் உள்ளடக்கமானது 1.02மி.கி/கி உலர் நிறையாக உள்ளது. *S. platensis* இல், தானியங்களில் உள்ளடங்கியுள்ள புரதச்சத்தினை விட மும்மடங்கு புரதச் சத்து அதிகமாகவுள்ளது. கௌபி மற்றும் ...., மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழயிறைச்சி, கோழிமுட்டை என்பனவற்றில், இருப்பதைவிட, ஐந்து மடங்கு புரதச்சத்து அதிகமாக உள்ளது அதுபோன்று நண்டு இரால் என்பனவற்றை விட மூன்று தொடங்கி நான்கு மடங்கு புரதச்சத்து *S. platensis* ல் உள்ளது. இதைவிட இந்த *S. platensis* ல் உயர் அளவில் இரும்பு, பொட்டாசியம், கல்சியம், நாகம், மற்றும் ஒக்சியேற்றவெதிரி என்பன உள்ளடங்கியுள்ளமை மேலதிக தகைமைகளாகும். எனவே இந்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட உண்மையானது தற்போது பெரும்பான்மையான இலங்கை வாழ் மக்களால் உண்ணப்படும் போஷனண சத்துக்களை விட அதிகமான போஷணையையும் நோய் சிகிச்சை அளிப்பிற்குரிய இயல்புகளையும் இந்த *S. platensis* கொண்டுள்ளது. வழமையான உணவு முறையை விட இது மிகச்சிறந்த உணவுப் பிரதியீடாக அமைகின்றது.

**பிரதான சொற்கள்:** *S. platensis,* போஷணை, புரதம், கனிமங்கள், ஒக்சியேற்றவெதிரி, மொத்த பினாயில்.

### மனித வள அபிவிருத்தி

### எம்.பில் பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்ட மாணவர்கள்

திருவதி. ஓ.எஸ். பெரேரா பேராதெனிய பல்கலைக்கழகத்தில் எம்.பில் பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்டார்.
ஆய்வுப்பொருளின் தலைப்பு: Effect of commonly consumed cowpea cultivars incorporated experimental diets on serum lipids, liver antioxidative capacity and caecal fermentation in rats

ஆராய்ச்சி உதவியாளர் - திரு. நிஷாந்த்த விஜயசூரிய தேசிய விஞ்ஞான மன்ற மானியத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்.

### 2012ம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள்

சுயேட்சை ஆராய்ச்சி உதவியாளர்கள்

1. திரு ருக்ஷிலா ஜயமினி பங்காமுவகே (ஆறு மாதங்கள்)
2. திரு. சுசாந்த்த ஏரத் ஏக்கநாயக்க - முன் இடைத்தவனை (மூன்று மாதங்கள்)
3. சுபாஷி உபயவரதன - பட்டம் பயிலும் மாணவர் பேராதெனிய பல்கலைக்கழகம் (இரண்டு கிழமைகள்)
4. சுமுது சித்தாரா அமரசேகர - பட்டம் பயிலும் மாணவர் பேராதெனிய பல்கலைக்கழகம் (இரண்டு கிழமைகள்)

### இறுதி வருட பட்டம் பயிலும் மாணவர்களை கண்காணித்தல்

1. திருவதி ஆர்.எம்.பீ.கே.எஸ. ரத்னமாலா - இறுதி வருட மாணவர், விவசாய பீடம், பெராதேனிய பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)
2. திருவதி ஆர்.எம்.ஜீ.சி.கே. ஜயதிலக்க - இறுதி வருட மாணவர், விவசாய பீடம், பெராதேனிய பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)
3. திருவதி. டி.டபிள்யூ.எம்.எம். குமாரி - இறுதி வருட மாணவர், விவசாய பீடம், பெராதேனிய பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)

4. திரு. இடான் லக்ஷான் - இறுதி வருட மாணவர், விவசாய பீடம், பெராதேனிய பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)
5. திருவதி. சத்துரிக்கா ரத்நாயக்க - இறுதி வருட மாணவர், விவசாய பீடம், பெராதேனிய பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)
6. திரு.டி.எம்.ஏ.பீ. திசாநாயக்க - இறுதி வருட மாணவர் ஊவா வெல்லஸ்ச பல்கலைக் கழகம் (மூன்று மாதங்கள்)
7. திரு.ஜி.டபிள்யூ.ஏ.எஸ்.லக்மினி - விவசாய பீடம் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் (ஆறு மாதங்கள்)
8. திரு.டி.எஸ்.கே. மெதகொட - இறுதி வருட மாணவர் ஊவா வெல்லச பல்கலைக்கழகம் (ஒரு கிழமை)
9. திரு.நிஷானி வீரசிங்க - இறுதி வருட மாணவர் ஊவா வெல்லச பல்கலைக்கழகம் (ஒரு கிழமை)

## 7.5 மூலக்கூற்றுக்குரிய உயிரியல் மற்றும் பிறப்புரிமையியல்

### 7.5.1 கல உயிரியல்

**கருத்திட்டத் தலைவர்: கலாநிதி டி.என். மகானா - ஆராய்ச்சி** (*ஆராய்ச்சி இணையுரிமையாளர்)*

### கருத்திட்ட விவரணம்

தாவரக்கல உயிரியல் கருத்திட்டமானது 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் cyanobacteria பற்றிய ஆராய்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 2009ம் ஆணடு கருததிட்டமானது கல உயிரியல் என பெயரிடப்பட்டது. தற்போது ஆராய்ச்சியானது இரு பிரதான பரப்பெல்லைகளில் முன்னெடுக்கப்படுகினறது. அவையாவன ஒவ்வொரு வகுதிகளிலும் உபகருத்திட்டங்களை கொண்டதாய் cyanobacteria மற்றும் tuberculosis எனப்படும் இரு பரப்பெல்லலைகளாகும். இக்கருத்திட்டத்தின் நோக்கானது வளங்களை ஆய்வு செய்தல், மனித நலன் புரி மேம்படுத்துகை மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு என்பனவாகும்.

### நுண் அங்கிகளை தனிமைப்படுத்தல், இணங்காணல் மற்றும் மனிதரில் அவற்றின் தாக்கங்கள்.

மரவாழ்வில் prokaryotic மற்றும் eukaryotic ஆகிய இரு கிளைகளுக்கும் பரீச்சியமான சிறப்பியல்புகளையுடைய cyanabacteria மற்றும் archaea என்பன துணைமையாக இருக்கும் உயிரி ஆகும். அண்மைக்காலத்தில் இருந்து cyanabacteria மற்றும் archaea என்பனவற்றின் உயிர்த் தொழில்நுட்பவியல் செயலூட்டல் தொடர்பிலான அவதானிப்பானது அதிகரித்துக்கொண்டு வருகின்றது. தற்கால ஆய்வுகள் தரும் தகவல்களின் அடிப்படையில் நோக்கின், இலங்கையின் வெப்ப நீரூற்றுக்கள் மற்றும் நீர்த் தேக்கங்களில் உள்ள cyanabacteria மற்றும் archaea என்பனவற்றின் வேறுபட்ட வகைகள் உண்டு. cyanabacteria வில் உள்ள நச்சுத்தன்மையானது மனித உடல் நலத்திற்கு அதிகளவு ஊறு விளைவிக்கும் ஒன்றாக இனங்கானப்பட்டுள்ளதுடன் இவை அதிகமாக குடிநீரில் இருக்கும் ஒன்றாகவும் அறியப்பட்டுள்ளது. cyanabacteria வில் உள்ள நச்சுத் தன்மையினை முன்னதாகவே அறியக்கூடியதாக இருப்பதன் மூலம் உடலுக்கு ஏற்படக்கூடிய நலன் குறைப்பாட்டையும் முன்னதாகவே அறிந்துகொண்டு அதனை தடுக்க நடவடிக்கைகளை எடுக்கலாம்.

### cyno நச்சும் மற்றும் நோய்க்காரணி அறியப்படாத chronic சிறுநீரக நோயும்

குறிப்பாக குடிப்பதற்கும் மற்றும் பொழுதுபோக்கிற்கும் பயன்படுத்தப்படும் நீரின் மூலம் அதிகளவு cyno பக்றீறியா நச்சுத் தன்மையானது உடலிற்கு செல்வதால் அது உடல் நலத்திற்கு அதிகளவு ஊறு விளைவிக்கும் ஒன்றாக அறியப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து நன்னீர் நீர் நிலைகளில் அதிகளவாக காணப்படக்கூடிய நஞ்சாக cynotoxins , microcystins மற்றும் cylindrospermopsin என்பன அறியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நோய்க்காரணிகள் மற்றும் பிறப்பு இறப்பு பற்றிய புள்ளிவிபர ஆய்வுகள் தொடர்பிலான விபரங்கள் அதிகளவில் அறியப்படவில்லை என்பதுடன் இவை தொடர்பில் எண்ணிக்கையில் சிறிய அளவிலான விபரங்களே பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதற்கான

காரணமானது இராசாயம் மற்றும் உயிரியல் சேர்மானங்களின் ஒருங்கு சேர்ந்த தாக்கங்களாக இருக்காலாம்; அத்துடன் அத்தகைய பிரதேசங்களில் இருக்கும் நீர் நிலைகளில் cynotoxins அதிகளவில் காணப்படுவதாகவும் இருக்கலாம். cynotoxins உள்ளது என்பதை துணிபதற்கு மூலக்கூற்றுக்குரிய உயிரியல், உயிர் இரசாயனவியல் மற்றும் உயிர் மதிப்பீட்டு தொழில்நுட்பங்கள் ஆகியவை பாவிக்கப்படுதலின் பெறுமானத்தை தாபிப்பதற்கு cynotoxins ஒரு உயிரியல் கேடாக கருதப்படுகிறது.

### மரபுரிமையியல் வெளிப்படுத்தல் பகுப்பாய்வு: இலங்கையில் நோய்க்காரணி அறியப்படாத chronic சிறுநீரக நோயில் (CKDu) தவறிய தொடர்பிணைப்பை இனங்கானல்.

இந்த CKDu நோயாளிகளின் மரபுரிமையியல் வெளிப்படுத்தல் பகுப்பாய்வினை தீர்மானிப்பதற்கு ஆய்வுகள் இன்னும் செய்யப்படவில்லை. ஆதலினால், இந்த சோதனை ஆய்வினை மேற்கொள்வதின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சில மரபுரிமையியலுக்கு (மருந்துகள், XENOVIOTICS, சூழல் காரணிகள், ஆக்சிஜனேற்ற அழுத்தம், பாரமான உலோகங்கள், நீரிழிவு இதர...) மரபுரிமையியல் வெளிப்படுத்தல் பாணியினை, மனிதக்கட்டுப்பாடுகள் மற்றும் நோய்வாய்க்குட்பட்ட சிறுநீரிக மாதிரிகளில் (RMA) வெளிப்படுத்தல்களுடன் PCR வரிசைகளைப் பயன்படுத்தி துணியலாம். CKDu நோயுடன் கூடவே வளரும் மரபுரிமையியல் வெளிப்படுத்தல் பாணிகளை இனங்கானுவதன் மூலம் (செயலூட்டல்மிகு உயிரியல் பாணிகள்) இந்நோயின் மூலம் ஏற்படுவதற்கு சாத்தியமான அனர்த்தக் காரணிகளை துணியலாம்.

### பல்மருந்து தடுப்புக் காச நோய் (MDR-TB)

மருந்துகள் முக்கிய இடத்தை வகிப்பதும் உயர் இறப்பு வீதத்தைக் கொண்டதுமான MDR-TB மக்களின் சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் பிரதான இடத்தை வகிக்கும் ஓர் பிரச்சனைக்குரிய விடயமாகும். MDR-TB ஐ பொறுத்தவரையில் முகங்கொடுக்கப்படும் சவால்கள் எனப்படும்போது அதில் காசநோயைக் கட்டுப்படுத்தல், காசநோயால் பாதிக்கப்பட்ட நோயாளியினை விரைவாகக் கண்டுபிடித்தல் நோய் எதிர்ப்புப் பராமரிப்பு செயன்முறையை அதி சிறப்பான முறையில் வழங்குதல், தடுப்பு விகாரங்கள் பரவப்படுதலினை தடுத்தல் என்பன உள்ளடங்கும். இக்கருத்திட்டமானது ஒக்டோபர் மாதம் பூரண நிறைவிற்குக் கொண்டுவரப்பட்டு இவ்விடயம் தொடர்பிலான இறுதி அறிக்கையானது தேசிய ஆராய்ச்சி மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எமது ஆய்வுகளின் மூலம் காசநோய் விகாரங்களின் மாற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அதனூடாக இரு பிரதான மருந்துகளான isoniazid மற்றும் rifampin இனை தடுக்கவும் ஒரு மூலக்கூற்றுக்குரிய தொழில்நுட்பத்தினை நாம் விருத்தி செய்யக்கூடியதாக இருந்தது. ஆதலினால் இந்த தொழில்நுட்பமானது எளிதில் மாறுபடும் தன்மை கொண்ட மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கு வழிப்படுத்தலாம். இம் முறையானது பாரம்பரிய வளர்ச்சி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு எடுக்கப்படும் நேரத்தின் அளவைக் குறைக்கும்.

### காசநோய் அற்ற mycobacteria (NTM) யினை கண்டுபிடிப்பதற்கு ஒரு விரைவான முறை

வழமையான மைக்ரோ பக்றீறியம் என்பது தொற்றை ஏற்படுத்தும் உயிரியாக இருப்பதுடன் இது நீர்ப்பீடனம் குறைந்த நோயாளிகளையும் மற்றும் ஏற்கனவே நுரையீரல் நோய்கள் இருக்கின்ற நோயாளிகளையும் மிகவிரைவாக தாக்கும். எமது ஆய்வுகளின் மூலம் பெறப்பட்ட மூலக்கூற்றுக்குரிய மதிப்பீடுகிளின் துணையுடன் நோயாளிகளின் சளி மாதிரிகளிலிருந்து விரைவாக வளரக்கூடிய காசநோய் அதுபோன்று வேகமின்றி வளரும் காசநோய் என்பனவற்றை வேறு பிரித்து அறியலாம். இந்தக் கருத்திட்டமானது அதன் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

### சனத்தொகைக்கான MIRU-VNTR typing system மற்றும் Spoligotyping - இது காசநோயின் மூலக்கூற்றுக்குரிய நோய்ப் பரவல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது.

காசநோய் நோயாளிகளை உயிர்ப் பிழைக்க வைத்தல் அந் நோயினை கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல் என்பவை தொடர்பில் மூலக்கூற்றுக் குரிய முறைகளின் கீழ் அடங்கக்கூடிய Mycrobacterial strain typing முறையானது ஒரு பிரதான கருவியாக கருதப்படுகின்றது. இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் தற்போதைய ஆய்வின் கீழ், கண்டியிலுள்ள மத்திய மார்பு வைத்தியசாலைக்கு வருகின்ற காசநோயாளிகளிடத்திலிருந்தும் மற்றும் போகம்பர சிறைக்கூடத்தில் இருக்கும் காசநோயாளிகளிடத்திலிருந்தும் பெறப்படுகின்ற மாதிரிகளில் MIRU-VNTR typing system மற்றும் Spoligotyping இனை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு நோயாளிகளிலும் இருக்கின்ற நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களில் காணப்படும் வேறுபாட்டை அறியக்கூடியதாக இருக்கின்றது.

**பாரிய அளவில் சுருள் பாசி வளர்ச்சி**

மகாத்மா காந்தி நிலையத்துடன் கூட்டினைந்து தற்போது மேற்கொள்ளப்படும் இக்கருத்திட்டதின் பிரதான குறிக்கோளானது சுருள் பாசி வளர்ப்பை மேம்படுத்தலாகும். சுய துணைமை வர்த்தக கூட்டுமுயற்சிகளுக்கு குறைந்த செலவினத்திலான ஓர் உள்ளீடாக சுருள் பாசி பயன்படுத்தப்படுகின்றது. தற்போது ஆய்வுகூடங்களில் சுருள் பாய்ச்சி வளர்ச்சியானது பேணப்படுவதுடன் குறைந்த செலவினத்திலான மாற்று இரசாயன முறைகள் பயன்படுத்தப்பட்டு இவை பச்சை வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன.

**ஆராய்ச்சி உதவியாளர்:** திருவதி ஆர். பீ. வணிகதுங்க (அ. க. நி), திருவதி எச். எம். லியனகே (அ. க. நி)
திருவதி டி. கே. வீரசேகர (அ. க. நி), திருவதி எஸ். மகேஷ்வரன் (தே. ஆ. ம. - ஒக்டோபர் 31 வரை).

**ஆராய்ச்சி நிபுணர் மற்றும் தொழில்நுட்பவியல் உதவியாளர் - சுருள் பாசி கருத்திட்டம்:**
பேராசிரியர் எஸ். ஏ. குலசூரிய (வருகை ஆராய்ச்சி பேராசிரியர்)
திரு ஏ. தென்னகோன்

**கூட்டிணைவுகள்:** கலாநிதி என். வி. சந்திரசேகரன் (கொழும்பு பல்கலைக்கழகம்)
வைத்தியர் டி. அபயசேகர (பொது வைத்தியசாலை, கண்டி)
பேராசிரியர் வி. தவநேசன் (பேராதெனிய பல்கலைக்கழகம்)
வைத்தியர் டி. மெதகேதர (பொது வைத்தியசாலை, கண்டி)
பேராசிரியர் எஸ். யசவர்தன (ஸ்ரீ ஜயவர்தணபுர பல்கலைக்கழகம்)



**கல உயிரியல் ஆராய்ச்சிக் குழு - 2012**

### 7.5.1.1 சைநோ பக்றீறியாவின் மூலக்கூற்றுக்குரிய உயிரினங்கள் மற்றும் Microcystin உற்பத்தி

**ஆர். பீ. வணிகதுங்க மற்றும் டி. என். மக்னா ஆராச்சி**

கலஉயிரியல், அடிப்படை கற்கைகள் நிறுவகம், கண்டி

**அறிமுகவுரை**

வெப்ப நீரூற்றுக்கள், பாலைவனங்கள் மற்றும் அந்தாட்டிக்கா உள்ளடங்கலாக புவியிலுள்ள கிட்டத்தட்ட சகல சுற்றாடல்களிலும் சைநோ பக்றீறியா எனப்படும் ஒளி சேர்க்கையின் பக்றீறியா அதிகளவில் காணப்படுகின்றது. பல சைநோ பக்றீறியா விகாரங்களாவன நச்சுக்களை உற்பத்தி செய்கின்றது. இந்த நச்சுக்களாவன நீர்வாழ் உயிரினங்களை பாதிக்கும் அதே வேளையில் மனித மற்றும் விலங்கு வர்கத்திற்கு சுகாதார கேட்டை ஏற்படுத்தும் பிரச்சனைக்குரிய விடயமாக கருதப்படுகின்றது.

**இலக்குகளும் குறிக்கோள்களும்**

இந்த ஆய்வின் நோக்கானது, உருவியல் மற்றும் மூலக்கூற்றுக்குரிய பகுப்பாய்வு என்பனவற்றைப் பயன்படுத்தி வேறுபட்ட நீர்தேக்கங்களில் சைநோ பக்றீறியா சமதானியத்தை வகைப்படுத்தல் மற்றும் சைநோ பக்றீறியா சமதானியங்களினூடாக Microcystin இனது உற்பத்தியை மதிப்பீடு செய்தல்.

**பெறுபேறு**

நீர்தேக்கங்கள், நீர் மற்றும் மண் மாதிரிகளில் சைநோ பக்றீறியாவின் பல்வகைமையினை வகைப்படுத்தும் பொருட்டு மாதிரிகளாவன திபட்டு குளம், சிலம்பல குளம், பிபிலதன்வேஹேர தாங்கி, கரவில் ஹேன குளம், நாலந்த அணைக்கட்டு மற்றும் ஹிஹல நொச்சிகுளம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளில் சைநோ பக்றீறியாவானது *Limnothrix* sp., *Leptolyngbya* sp., *Phormidium* sp., *Synechocystis* sp., *Pseudoanabaena* sp., *Chroococcus* sp. and *Aphanothece* sp. ஆக இருப்பதாக உத்தேசமாக இனங்கானப்பட்டுள்ளது. சூழலிலுள்ள நீர் மாதிரிகளிலிருந்து PCR எதிர் விளைவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சகல டி. என். ஏ. மாதிரிகள் மற்றும் 16Sr RNA மரபணுக்களுக்கான வளர்ச்சியுற்ற சமதானியங்களாவன சைநோ பக்றீறியல் ஒலிகனுசேலோலைட் இணைப்பயன்படுத்தி கிட்டத்தட்ட 450 bp தனித்துவமான துண்டினை வழங்கியது. 16S rRNA மரபணுக்களின் சேர்மானம் DGGE மற்றும் ரங்கிருள்பொத, கன்னியா, நெழும்குளம், மஓயா மற்றும் வெஹாவ வெப்பநீரூற்றுக்கள் என்பனவற்றில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் தொடர் வரிசை பகுப்பாய்வானது *Chroococcidiopsis*, *Oscillatoria*, *Calothrix*, *Leptolyngbya* and *Xenococcus*. ஆகியவற்றின் கீழ் அடங்கும் மரபணுவகைகளில் சைநோ பக்றீறியா உள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. மைக்ரோகைஸ்டினின் செயலூட்ட திறமானது mcyA மரபணுக்களைப் பயன்படுத்தி *Chroococcidiopsis*, *Nostoc* மற்றும் *Anabaena* விகாரங்கள் என்பனவற்றை உற்பத்தி செய்யவல்லது என்பதனை பீ. சி. ஆர் பெறுபேறுகள் உறுதிப்படுத்துகின்றன. HPLC பகுப்பாய்வு Microcystin RR ஆனது *Chroococcidiopsis* விகாரங்கள் 1R மற்றும் L5ல் கண்டுபிடிக்கப்பட்டது. Microcystin LR ஆனது *Chroococcidiopsis* விகாரங்கள் 1R மற்றும் D3ல் உள்ளது என கண்டுபிடிக்கப்பட் அதே வேளையில் Microcystin - YR ஆனது 1R, L5, Batti.6.2, D3 மற்றும் YRS 4a உள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது. *M. aeruginosa* (PCC 7941), *M. aeruginosa* BL and *Chroococcidiopsis* சமதானியங்கள் என்பனவற்றில் Microcystin செறிவானது PPI மதிப்பீடுகளை பயன்படுத்தி துணியப்பட்டது.

## 7.5.1.2 சைநோ நச்சுத் தன்மையும் நோய்க்காரணி அறியப்படாத குரோனிக் நிறுநீரக நோயும் (CKDu)

**எச். எம். லியனகே மற்றும டி. என். மக்னா ஆராச்சி**
கல உயிரியல் கருத்திட்டம் அடிப்படை கற்கைகள் நிறுவகம், கண்டி

### அறிமுகவுரை

உலகளாவிய ரீதியில் இருக்கின்ற நன்னீர் ஏரிகளில் சைநோ டொக்சின், மைக்ரோ கிஸ்டின் மற்றும் *Cylindrospermopsis* ஆகியன மிக ஆதிக்கம் செலுத்தும் நஞ்சாக இனங்கானப்படுவதுடன் அவை மனிதவர்க்கத்தின் ஈரல் மற்றும் சிறுநீரக செயற்பாடுகளை பாதிக்கும்.

### இலக்குகளும் குறிக்கோள்களும்

*Cylindrospermopsis* விகாரங்களின் சமதானியங்கள் மற்றும் மூலக்கூற்றுக்குரிய வகைப்படுத்தல் அத்துடன் (CKDu) வினைப் பொறுத்தவரையில் சைநோடொக்சின் என்பது ஒரு அனர்த்தக் காரணியா எனத் துணிதல்.

### பெறுபேறுகள்

அனுராதபுர கிராந்துரகோட்டே மற்றும் நிக்ககுளம் / பொல்பிதிகம ஆகிய இடங்களில் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. கிராந்துர கோட்டையில் சிறுநீரக நோய் சம்பந்தமாக தொடர்ச்சியாக மருத்துவரைக் காணவரும் (CKDu) நோயாளிகளிடமிருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டன. யாழ்ப்பாணம், மொனறாகலை, கண்டி ஆகிய பிரதேசங்களில் சேகரிக்கப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட நீர் மாதிரிகளின் உருவியல் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. நுணுக்குக் காட்டியின் கீழ் *Aphanothece, Dermocarpa, Calothrix, Phormidium, Chroococcidiopsis, Synechocystis, Synechococcus, Anabaena,Chroococcus,Westiellopsis,Xenococcus,Oscillatoria, Chlorogloeopsis, Limnothrix,* ஆகியன உத்தேசமாக நஞ்சு உற்பத்திகளாக இனங்காணப்பட்டன. நீர்த் தேக்கங்கள் மற்றும் CKDu நோயாளிகளின் நீர் மாதிரிகள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சமதானியங்களில் இருந்து டி. என். ஏ. பிரித்தெடுக்கப்பட்டு அதில் சைநோ பக்றீறியா உள்ளதா என்பதை இனங்காண்பதற்கு 16S rRNA உடன் PCR மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டது. 22 மாதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டு அவையாவன *Hapalosiphon, Leptolyngbya, Tolypothrix, Phormidium, Mastigocladus, Anabaena, Nostoc, Chroococcus* மற்றும் சைநோ பக்றீறியா ஆக இனங்காணப்பட்டது. மேலும் 8 சூழலியல் நீர் மாதிரிகளாவன 16S rRNA மற்றும் மரபணுக்களுக்கு அதிகரிக்கப்பட்டன. மாதிரிகளாவன வரிசைப்படுத்தப்பட்டு அவை *Phormidium, Oscillatoria, Raphidiopsis, Cylindrospermopsis* மற்றும் சைநோ பக்றீறியா ஆக இனங்காணப்பட்டது. CKDu நோயாளிகளின் இரத்த மாதிரிகளில் இருந்து டி. என். ஏ. ஆனது தனிமைப்படுத்தப்பட்டதுடன் அவர்களின் இரத்தங்களில் சைநோ பக்றீறியா உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்று 16S rRNA என்பதனைப் பயன்படுத்தி 50 மாதிரிகளில் PCR மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டது. சைநோ பக்றீறியாவானது இந்த இரத்த மாதிரிகளில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்படாத விடயமாக உள்ளது. மைக்ரோசைஸ்ட் ஆனது 8 தூய்மையான வளர்ப்புகள் மற்றும் 25 நிக்ககுளம் / பொல்பிதிகம சூழல் மாதிரிகள் மற்றும் பண்பறிதற்குரிய மைக்ரோசைஸ்டின் செறிவுகள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்பட்டது. (mean conc. 0.952 ug/L). அதே நிக்ககுளம் பொல்பிதிகம மாதிரிகள் தொடர்பில் ELISA சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் பண்பறிதற்குரிய cylindrospermopsin செறிவில் சைநோ நச்சானது இரு நீர்த்தேக்கங்களில் பிரித்தெடுக்கப்பட்டதுடன் நீர் மாதிரிகளும் மற்றும் இரு CKDu நோயாளிகளின் இரத்த மாதிரிகளும் HPLC பகுப்பாய்வினிமித்தம் அனுப்பி வைக்கப்பட்டது.

## 7.5.1.3 PCR மதிப்பீடுகளைப் பயன்படுத்தி மருந்து தடுப்பு மைக்ரோ பக்றீறியா காசநோய் விகாரங்களை விரைவாக கண்டுபிடித்தல்

**டி. என். மக்னா ஆராச்சி, டி. கே. வீரசேகர, எஸ். மகேஸ்வரன், டி. மெதகேதர**
கலஉயிரியல் கருத்திட்டம், அடிப்படை கற்கைகள் நிறுவகம் ஹந்தானை வீதி. கண்டி

சுவாசத்தொகுதி மத்திய மார்பு சிகிச்சைப் பிரிவு, கண்டி

### அறிமுகவுரை

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வளர்ந்து வரும் காசநோயானது ஒரு பாரிய பிரச்சனையாக நிலவுகின்றது. இந்த காசநோயானது வாழ்க்கைக்கு அச்சுறுத்லை ஏற்படுத்தும் ஒரு நோயாக இருக்கும் அதே வேளையில் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டால் சுகமாக்கவோ அல்லது கட்டுப்படுத்தக்கூடியதொன்றாகவோ இருக்கின்றது.

### குறிக்கோள்கள்

இலங்கையில் கண்டியில் மத்திய மார்பு வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் காசநோய் நோயாளிகளின் M. காசநோயின் மருந்து தடுப்பு பாணியின் வளர்ச்சி மற்றும் *rpoB, inhA* மற்றும் *katG* மரபணுக்களின் உருமாற்றத்தை PCR அடிப்படையாகக்கொண்ட முறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானித்தல்.

### பெறுபேறுகள்

அமில வேக வசிலி நேர்த்தாக்கம் உள்ளவர்களாகவிருந்த கயரோக நோயாளிகளிடமிருந்து மொத்தமாக 275 உமிழ்நீர் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அமில பசிலசுக்கு எதிர்மறையாகவிருந்தவர் களும் அதே கிளினிக்குக்கு வருபவர்களுமான நோயாளிகளில் 25 கட்டுப்பாட்டு தொகையைக் கொண்ட நோயாளிகளிடமிருந்தும் உமிழ்நீர் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டது. சிகிச்சையளிக்கப்பட்ட மாதிரிகள் வளர்க்கப்பட்டன. விகிதசம முறையைப் பயன்படுத்தி L-J MB / 7H10 ஊடகம் மீது ஐசோ நியாசிற் (INH) றிபாம் பின் (RIF) ஆகியவற்றுக்கான மருந்து உணர்வு பரிசோதனைகள் செய்யப்பட்டன. இந்த 161 (64-4%) தனிமைப்படுத்தி வைக்கப்பட்டவைகளிலிருந்து MTV தொகுதியாக உறுதிப்படுத்தப்பட்டதுடன் மீதி உயிர் இரசாயன பகுப்பாய்வினாலும் மூலக்கூறு பகுப்பாய்வினாலும் MOTT ஆகக் கண்டறியப்பட்டன. இந்த ஆய்வில் 32(12.8%) M கயரோகத் தொகுதி தனிமைப்படுத்தப்பட்டவைகள் RIF எதிர்ப்பானவைகளாக காணப்பட்டவேளையில் INH இற்கு உணர்வுடையவைகளாக இருந்தன. தனிமைப்படுத்தப்பட்டவைகளில் ஆறு (2.4%). தனிமைப்படுத்தப்பட்டவைகள் MDR ஆகக் காணப்பட்டன. rpoB ஜீனின் றிவாம்பின் எதிர்ப்பு நிர்ணயிக்கும் பகுதிக்கு உள்ளேயும் வெளியேயும் மாறுதல்கள் அவதானிக்கப்பட்டன. அபிவிருத்தி செய்யப்பட்ட பல்தொகுதி PCR உடன் (inhA+rpoB,katG+rpoB) எம் கயரோகத்தின் H37RV ஐ நியமமாகப் பயன்படுத்தி பஈனப மாதிரியாக கண்டறியப்பட்ட DR-TB மாற்றங்கள் வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட்டன. இது ஒரு துரிதமான முறையாக இருப்பதனால் இத்தொழில் நுணுக்கம் நொய் அறிதியிடல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

இந்த வேலைக்கு இலங்கையின் தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் வழங்கப்படும் மானியமொன்றினால் (இலக்கம் 07-47) ஆதரவு வழங்கப்படுகின்றது.

## 7.5.1.4 மூலக்கூறு வகைப்படுத்தலை பயன்படுத்தி நுரையீரல் அழல்வியல் மாதிரிகளில் கயரோகமல்லாத மைக்கோ பற்றீரியாவைக் கண்டுபிடித்தல்

டீ.என்.மாகன ஆராய்ச்சி[1], டீ.கே.வீரசேக்கர[1], டீ.மெதகெதர[2]

கல உயிரியல் கருத்திட்டம், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம், ஹந்தானை வீதி, கண்டி[1], சுவாசப் பிரிவு மத்திய இதயக் கிளினிக்கு, கண்டி[2]

உயிரின எரிபொருள் ஆராய்ச்சிக் கருத்திட்டம், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்

### முகவுரை

மைக்கோ பற்றீரியம் கயரோக தொகுதிக்கு சேராத இனங்களையும் உள்ளடக்கி கயரோகம் அல்லது ஒரேமாதிரியான மைக்கோ பற்றீரியா தவிர்ந்த கயரோகமல்லாத மைக்கோ பற்றீரியா.

### குறிக்கோள்

மைக்கோ பற்றீரியல் தொற்று நோயின் திட்டவட்டமான நோய் அறுதியிடலுக்கான போலி மெரேஸ் சங்கிலி பின்னிய செயல்விளைவு முறையியலின் அடிப்படையில் எளிய பரிசோதனையொன்றை உருவாக்கு செய்தல்.

### பெறுபேறுகள்

கண்டி போதனா மருத்துவசாலைக்கு செல்லுகின்ற நோயாளிகளிடமிருந்து நுரையீரல் நோயியில் மாதிரிகள் (n=202) 46 AFB நேர்மறை வளரப்புக் கரைசல்களின் நான்கு தனிமைப்படுத்தப்பட்ட கரைசல்கள் வேகமாக வளர்ச்சியடையும மைக்கோ பற்றீரியாக்களையும் (-280-320bp DNA துண்டு) கொண்டிருந்ததுடன், 21 தனிமைப்படுத்தப்பட்டவைகள் மெதுவாக வளர்ச்சியடையும் மைக்கோ பற்றீரியாக்களையும் (-200-220 bp DNA துண்டு) கொண்டிருந்ததுடன் 15 தனிமைப்படுத்தப்பட்டவைகள் 2 வரிசைகளை கொண்டிருந்ததுடன் இவை துரிதமான வளர்ச்சி அடையும் மைக்கோ பற்றறீயாக்களையும் மெதுவாக வளர்ச்சியடையும் மைக்கோ பற்றீரியாக்களையும் கொண்டிருந்தன. DNA வரிசை பரிசீலனை நோக்காடியா, M இன்ரா செலியுலேயர் மற்றும் M வோக்கேக்கம் ஆகியவற்றின் பிரசன்னத்தையும் காண்பித்தன. வரிசைப்படுத்துவதன் மூலம் மைக்கோ பற்றீரியம் இனத்தினதும் மற்றும் 7 M கயரோக இனங்களினதும் 6 தனிமைப்படுத்தப்பட்ட பொருட்களும் கூட கண்டறியப்பட்டன. $H_{37}Rv$ யின் Hae III இன் சமிபாடு 120 bp மற்றும் 50 bp வரிசைகளை தந்துள்ளன. M கோவிஸ் 120 bp, 100 bp, 50 bp DNA துண்டுகளை உற்பத்தி செய்துள்ளதுடன் M கயரோக போகெய்கம் 150 bp துண்டுகளையும் நோக்காடியா 180 bp துண்டுகளையும் 200bp துண்டுகளையும் உற்பத்தி செய்துள்ளன. M கோசவிஸ்சின் C foI சமிபாடு 130 bp மற்றும் 100bp DNA துண்டுகளையும் M போகெய்கம் 230bp, 100 bp துண்டுகளையும் உற்பத்தி செய்துள்ளன. இந்த வேலைக்கு இலங்கையின் கயரோகத்திற்கெதிரான இயக்கத்திடமிருந்து வழங்கப்படும் மானியமொன்றினால் பகுதியளவில் ஆதரவு வழங்கப்படுகின்றது.

### 7.5.1.5 காசநோயின் மூலக்கூற்றுக்குரிய தொற்று நோயியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு சனத்தொகைக்கு அதிசிறப்பான ஒரு MIRU-VNTR Typing System மற்றும் Spoligotyping

**டி. கே. வீரசேகர, டி. என். மக்னா ஆராய்ச்சி, வி. தவநேசன், டி. மதகேதர**
**கல உயிரியல் கருத்திட்டம், அடிப்படைக் கற்றைகள் நிறுவகம், ஹந்தானை வீதி, கண்டி.**

மருத்துவப்பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம் சுவாசத்தொகுதியானது, மத்திய மார்பு வைத்தியசாலை கண்டி.

#### அறிமுகவுரை

அண்மித்த காலங்களில் காசநோயானது மக்களிடையே தொற்றுதல் தொடர்பிலான ஆய்வானது பாரம்பரியமான தொற்றுகை மற்றும் மூலக்கூற்றுக்குரிய விகார தொழில்நுட்பங்கள் ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தி வெற்றிகரமாக ஆய்வு செய்யப்பட்டது. ஆதலினால் இனங்கானப்பட்ட விரல் அடையாளங்களுடன் விகாரங்களை தேடலின் மூலம் தொற்று மூலங்களை இலகுவாக வும் விரைவாகவும் நம்பிக்கைக்கு உரியதாகவும் இனங்கான முடியும். இது, தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறையான tuberculin இன் துணையுடன் முன்னெடுக்கப்படும் தோல் சோதனையின் மூலம் காசநோயினை இனங்காணல் எனும் முறையினை விட சிறப்பானது ஆகும்.

#### குறிக்கோள்கள்

spoligotyping மற்றும் MIRU-VNTR genotyping தொழில்நுட்பங்ளின் மூலம் MTB சமதானியங்களில் பண்பறிதல்.

#### பெறுபேறுகள்

4% NaOH மற்றும் மீது LJ வளர்ச்சி அத்துடன் MB7H10 ஊடகம் என்பனவற்றைப் பயன்படுத்தி மொத்தமாக கண்டி மார்பு வைத்தியசாலையிலிருந்து 100 நூறு சளி மாதிரிகள் அத்துடன் போகம்பர சிறைச்சாலையிலிருந்து 19 சளி மாதிரிகள் என்பன செயன் முறையாக்கம் செய்யப்பட்டது. LJ இன் மீதான வளர்ச்சியானது அதன் தோற்றமானது colonies என்ற நிலைக்கு வரும் வரையில் 37 $^0$C எட்டு கிழமைகளுக்கு அவதானிக்கப்பட்டது. சிறைச்சாலையில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளிலிருந்தான வளர்ச்சியானது மைக்ரோ பக்றீறியாவினை உள்ளடக்கி இருந்ததுடன் அது AFB நிறமேற்றமாக தீர்மானிக்கப்பட்டது. வளர்ச்சியுற்ற மைக்ரோ பக்றீறியாவிலிருந்து DNA ஆனது வழமையான CTAB/NaCl முறையினைப் பயன்படுத்தி பிரித்தெடுக்கப்பட்டது. வழமையான Booms முறையினைப் பயன்படுத்தி சளி மாதிரிகளிலும் DNA பிரித்தெடுத்து முன்னெடுக்கப்பட்டது.

#### தொடர்புக் குறிப்புக்கள்

1. டயல், ஆர்., சயிந்தர், எஸ்., மேவால்ட்-வால்ட்டர், கே., ரப், சி. எம்., ருஸ்ச்-கேர்டிஸ், எஸ்., நெய்மான், எஸ். (2002). ஜேர்மனியில் ஹம்பர்க் எனும் இடத்தில் காசநோய் தொற்று. பாரம்பரிய மற்றும் மூலக்கூற்றுக்குரிய தொற்று நோயியல் முறைகளைப் பிரயோகித்து நீண்ட கால அடிப்படையில் சனத்தொகையினை அடிப்படையாகக் கொண்டு காசநோய்த் தொற்றினை பகுத்தாய்தல். *J. Clin. Microbiol.* 40, 532-539.

#### மனிதவள அபிவிருத்தி

#### பி. எச். டி, எம். பில் மற்றும் முதுவிஞ்ஞான மானி பட்டங்களுக்கு தம்மை பதிவு செய்துகொண்ட மாணவர்கள்.

1. ஆர். பி. வணிகதுங்க (அ.க.நி), கொழும்பு பல்கலைக்கழகத்தின் பி. எச். டி பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்டவர்.

தலைப்பு: ‘Identification and characterization of cyanobacteria using 16S rRNA genes and detection of toxin producing cyanobacterial species using molecular markers’

2. எச். எம். லியனகே (அ.க.நி), கொழும்பு பல்கலைக்கழகத்தின் எம். பில் பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்டவர்.
   தலைப்பு: ‘Identification and molecular characterization of *Cylindrospermopsis* species in Sri Lankan water bodies’

3. டி. கே. வீரசேகர (அ.க.நி), பேராதெனிய பல்கலைக்கழகத்தின் எம். பில் பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்டவர்.
   தலைப்பு: ‘An optimized MIRU-VNTR typing system and spoligotyping for population-based molecular epidemiology studies of tuberculosis in three distinct population groups’

4. திருவதி டி. எம். டி. பீ. கே. பண்டார (சுயேட்சை) பேராதெனிய பல்கலைக்கழகத்தின் முதுவிஞ்ஞான மானி பட்டத்திற்கு தம்மை பதிவு செய்து கொண்டவர்.
   தலைப்பு: ‘Detection of WISE gene in *Mycobacterium tuberculosis*’

சிறு திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்

**2012ம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்கள்**

**தன்னிவிருப்பார்வ ஆராய்ச்சி உதவியாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. நில்மினி பெரேரா | : | ஐந்து மாதங்கள் (முழுநேரம்) |
| 2. சச்சினி மேஹேத்குபுர | : | இரண்டு மாதங்கள் (முழுநேரம்) |
கன்டிரா குரூஸ். கன்டிரா பராப்சிலோசிஸ் கன்டிரா ரூக்கோசா, கன்டிடா சேக், கண்டிரா ட்ரொப்பிக் காலிஸ் அல்பா அமெயிலெஸ்க்கு எதிரான நொதுய உள்ளூறுஞ்சி எடுத்தல் செயற்பாட்டிற்காகவும் ஹீமோலிசிஸ் பரிசோதனைக்காகவும் நுரை பரிசோதனைக்காகவும் ஆராயப்பட்டன. பெறுபேறுகள் பின்வருமாறு:

<u>Antifungal activity</u> : Only *Pisum Sativum* seed extracts showed antifungal activity
<u>Anti Candidal activity</u> : None of the tested seeds extracts showed a positive response
<u>Anti oxidant activity</u> : *Elusine, Coracana, Mucuna prurines, Paqspalum,Scrobiculatum, Setaria italica, Vigna, radiate,* Sorgham almum, *Dolichos biflorus and Elusine coracana* showed the presence of an antiosidant compounds
<u>Brine Shrimp lethality</u> : Setria italica, Vigna radiate, *Sorgham almum, Panicum miliare, Eleusine coracana* Showed high potential for the presence of toxic compounsm which may be useful in the isolation of cytotoxic compounds
<u>Mosquito larvicidal activity</u> : The five most potent larvicidal extracts were *Setaria ltalioca , Phaseolus aureus compounds, Panicum miliare and Elusine coracana*
<u>Phytotoxic activity</u> : *Mucuna pruriens, Sorgham almum, Setaria ltalioca , Paspalum scrobiculatum and Vigna radiate* showd the presence of phytotoxic compounds
<u>Haemolysis and froth test for saponins</u> : *Mucuna prurines, Paspahum scrobiculatum, Phaseolus aureus, Vigna unguiculata and Lathyrus aphaca* extracts are rich in saponins
a.Amylase inhabition assay : Results were inconclusive







**மனிதவள அபிவிருத்தி**

**(அ) பட்டப் பின்படிப்பு பட்டங்களைப் பூர்த்தி செய்தவர்கள்**

1. K.G.N.P.Piyasena, Ph.D.Title of the thesis: “ Allelopathic activity studies oof Sri Lankan flora and Chemical investigation of endophytic fungi and *terrestrial Streptomyces sp*.” Supervisor: Prof.H.R.W.Dharmaratne

2. W.R.M.Kumbukgolla, M.Phil. “Tea Catechins: Antibacterial activity against Methicillin – Resistant *Staphylococcus aureus* (MRSA) and enhancement of sensitivity of MRSA to oxacillin
Co-Supervisors, Prof.B.M.R.Bandara, Prof. V.Thevanasam and Prof.N.S.Kumar.

**(ஆ) Ph.D , M.Phil M.Sc. பட்டங்களுக்காக பதிவு செய்யப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர்கள் ஒவ்வொரு மாணவருக்குமான தற்காலிக பதவிப் பெயரும்கூட சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது.**

**(இ) இயற்கை உற்பத்திப் பொருள் பரிசோதனைக் கூடங்களில் பயிற்சியளிக்கப்பட்ட பட்டநிலை மாணவர்கள்**

## 7.7 கொள்கையளவிலானதும் கணிப்பிடத்தக்கதுமான விஞ்ஞானம்

### 7.7.1 அகவொளிவிடல்

**கருத்திட்ட தலைவர்** : பேராசிரியர் ஆசிறி நாணயக்கார *(ஆராய்ச்சி பேராசிரியரும் குழுத் தலைவரும்)*

**கருத்திட்டத்தின் விவரணம்**

திரவமொன்றில் விளையாட்டுத்தனமாக ஒலிவிடப்பட்ட தனியொரு வாயுக் குமிழியானது தனியொரு நீர்க் குமிழியின் அக ஒலிவிடல் பிரயோகப்படுத்தப்படும் ஒலி களத்தில் காலங்காட்டலில் நீளமல்லாத அலைவுகளை காண்பிக்கின்றதுடன் அது உச்ச உள்நோக்கிய நிலையில் ஒளியின் உப நானோ செக்கன்ட் ஒளிப் பரம்பலை வெளிவிடுகின்றது. இந்த நீர்க் குமிழி வெடிக்கும் போது அதிர்வு சக்தியானது UV தொடரில் ஒளியில் வீசுவதற்காக $4x10^{11}$ யைக் கொண்ட ஆகக் குறைந்த காரணியொன்றினாலாவது செறிவு நிலை அடைகின்றது. இந்த ஊதா நிற ஒளியின் வீசுகைகள் நானோ நாடியொன்றை விட குறைந்த காலத்திற்கு நீடிக்கும் நிலையை கொண்டுள்ளன. இந்த வெடிப்பின் பிற்பட்ட கட்டங்களில் நீர்க்குமிழிக்குள் உள்ளேயுள்ள வெப்ப நிலையும் அமுக்கமும் முறையே 20,000K மற்றும் 3,500 atm ஆகியன போன்ற உச்ச பெறுமதிகளை அடைகின்றன. இந்த நீர்க்குமிழிச் சுவர் உச்ச உள்நோக்கி வெடிக்கும் நிலைக்கு சமீபமாக $10^{11}$ $^{g}$ க்கும் மேலான வேகத்தை நீர்க்குமிழிச் சுவர் அடைகின்றது. தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடல் என்பது 0.1 µm இலிருந்து 10µm வரையான புறச் சூழ்நிலை உள்ள ஆரங்களைக் கொண்ட நீர்க்குமிழிகளுடன் மட்டுமே தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடல் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நீர்க்குமிழிகளின் வீழ்ச்சியடையும் ஆரங்கள் 0.1 µm இலிருந்து 0.1 µm வரை வீழ்ச்சியடையும்.

தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடலின் நிறமாலை 700nm க்கு மேற்பட்டு 190nm க்கு கீழே வரும்வரை நீடித்து நியாயமான அளவில் பரந்ததாக உள்ளது. வெளிவிடப்படும் ஒளியின் தீவிரத்தின் மேல் நீரின் வெட்டுப்புள்ளி ஊதா வெட்டுப்புள்ளி எல்லை வரை அலை நீளத்தின் குறைவுடன் அதிகரிக்கின்றது. (250nm க்குக் கீழே உள்ள எதுவும் குறைந்து கொண்டு வருகின்ற போதிலும் கிட்டத்திட்ட 200 nm ) நீரில் தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடலின் நிறமாலையானது 10 kH-z இடையேயுள்ள பிரயோக ஒலி அடிக்கடி நிகழ்வுகளுக்கான 6000K யிலிருந்து 20,000K (2 தொடரில் மேற்பரப்பு வெப்ப நிலைகளுடன் கறுப்பு உடலமைப்பு கதிர்வீசலுடன் பொருந்துகின்றது. 1 MHz ஒலி அடிக்கடி நிகழ்வினால் இயக்கப்படும் ஒதுக்கித் தனிமைப்படுத்தப்பட்ட நீர்க்குமிழியின் மறுபுறமாக தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடலின் நிறமாலையானது $10^{6}$ K plasma [3] விலிருந்து வெப்ப பிறெம்ஸ்ரா குளுங்குடன் நன்கு இசைந்து செயற்படுகின்றது.

ஒளி வெளிவிடல் (4) நேரத்தில் தனியொரு நீர்க்குமிழி அக ஒளிவிடல் நீர்க்குமிழிகளுக்குள்ளே ஏற்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்ட கவர்ச்சிகரமான நிலைமைகளை ஆராய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் முன்னறிகூற்றாக கூறுவதற்குமாக கொள்கையளவிலும் பரிசோதனை ரீதியிலுமான ஆய்வுகள் பெரும் எண்ணிக்கையில் இருந்தன. அநேக கொள்கையளவிலான/ கணிப்பியலிலான மாதிரிகள் தொடர்ச்சியான கொண்டினியூம் திரவ இயந்திரவியலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. (உதாரணம் - யூலர் சமன்பாடுகள் அல்லது நேவியர்/சமன்பாடுகள்) (4) கொண்டவையாக இருந்ததுடன் அவை பரிசோதனைப் பெறுபேறுகள் சிலவற்றை வெற்றிகரமாக போலியாக தயாரிக்கக்கூடியவையாக இருந்தன. மாதிரிகளில் பெரும்பான்மையானவை திரவ சமன்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் முடிவின் கடைசிக் கட்டங்களில் நீர்க்குமிழி சுவரின் வேகம் நீரில் (அல்லது திரவத்தில்) உள்ள ஒலியின் வேகத்தை விஞ்சுகின்றதுடன் நீர்க்குமிழிக்குள் ஏனைய உச்ச பௌதிக நிலைமைகள் அவதானிக்கப்படக்கூடியவையாக இருப்பதுடன் இந்த மாதிரிகளின் செல்லுபடியாகும் நிலை கேள்விக்குரியதாகும். (5) மேலும் இந்த திரவ அணுகு முறைகள் யாவும் போக்குவரத்து நடைமுறைகளையும் நிலையின் சமன்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான தேவையினால் அவற்றின் முன்னறிகூற்று சக்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒளி வெளிவிடுகை பொறிமுறையானது பற்றி இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளப்படாமல் இருப்பதன் காரணமாக கணிசமான பரிசோதனை மற்றும் கொள்கையளவிலான ஆராய்ச்சி என்ற விடயமாகவுள்ள தனியொரு நீர்க்குமிழி அகஒளிவிடலானது அந்த பரிசோதனைக்கும் கொள்கையளவிலான ஆராய்ச்சிக்கும் உரியதாக இருந்ததுடன் தொடர்ந்தும் இருக்கின்றது. தனியொரு நீர்க்குமிழி அகஒளிவிடலானது குளிர் உருகுதல் வழியாக மட்டுப்பாடற்ற சுத்தமான சக்தியை உற்பத்தி

செய்யக்கூடிய இருக்கும் அதன் திறனின் நிமித்தம் அது அநேக விஞ்ஞானிகளின் கவனத்தை கவர்ந்திழுத்துள்ளது. தனியொரு குமிழ் அக ஒளி வெளிவிடலில் ஒளியை வெளிவிடும் பொறிமுறையானது தற்போது பௌதிகவியலில் தீர்வு செய்யப்பட முடியாத பிரச்சினைகள் ஒன்றாகவுள்ளது.

**ஆராய்ச்சி உதவியாளர் :** Prabhath Herath, Sanjeewa Karunawamsha, Manoj Wijessingha

**பார்வையிடல்**


1. B.P.Barber, R.A.Hiller, R.Lofstedt, S.J.Putterman, K.R.Weninger, Phys. Rep.281 (1997) 65
2. S.J. Putterman, K.R.Weninger,Ann. Rev.Fluid Mech. 32 (2000) 445
3. C.Camara, S. Putterman, and E.Kirilov, Phys.Rev.Lett. 92.(2004) 124301
4. M.P.Brenner, S. Hilgenfelddt, D.Lojse, Rev. Mod. Phys. 74 (2002 ) 425 and references therein
5. S.J.Ruuth, S.J. Putterman, and B.Merriman, Phys. Rev. E 66 (2002)036310

  

### 7.7.1.1 தனியொரு நீர்க்குமிழி அக வொளிவிடலின் கணிப்பு முறை ஆய்வு

**ஆசிரி நாணயக்கார, சஞ்சீவ கருணாவன்ச, மனோஜ் விஜேசிங்க**

தனியொரு நீர்க்குமிழி அகவொளிவிடல் கருத்திட்டம், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம், கண்டி

**சுருக்கமான முகவுரை**

அநேக தனியொரு நீர்க்குமிழி அகவொளிவிடல் கொள்கையளவிலான / கணிப்பு முறையிலான மாதிரிகள் கொண்டினீயூவம் திரவ இயந்திரவியலை அடிப்படையாகக் கொண்டுருந்ததுடன் அவை பரிசோதனை பெறுபேறுகளில் சிலவற்றை வெற்றிகரமாக போலியாக தயாரிக்கக்கூடியவைகளாக இருந்தன. விசேடமாக யசூலியினால் உருவாக்கப்பட்ட கணிப்பு சார் மாதிரிகள் சில அக இரசாயன எதிர்த் தாக்கங்களை சரியான முறையில் போலியாக தூண்டக்கூடியவையாக இருந்தன.

**இலக்குகளும் குறிக்கோள்களும்**

இக்கருத்திட்டத்தின் இலக்கு என்னவெனில் அகவொளிவிடலின் ஒளியை உற்பத்தி செய்யும் பொறிமுறையைப் பற்றி புரிந்து கொள்வதாகும். நீர்க்குமிழியானது ஒளியை வெளிவிடும் போது நீர்க்குமிழிக்குள் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்து கொள்வதன் பொருட்டு நாம் அந்த குமிழி வெளிச்சத்தை வெளிவிடும் போது குமிழிக்குள் உள்ள பௌதிக நிலைமையை பற்றி அறிந்து கொள்வதற்கு கணனிகளை பயன்படுத்துகின்றோம். அத்துடன் கணிப்புச் செய்யும் இரசாயன மென்கலத்தை பயன்படுத்தி நீர்க் குமிழிக்குள் இடம்பெறக்கூடிய அக இரசாயன எதிர்விளைவுகளை பற்றி நாம் கற்று அவை குமிழியின் எல்லாவற்றையும் உள்ளிட்ட நடக்கையை அவை என்ன விதத்தில் பாதிக்கின்றன என்பதைப் பற்றி ஆராய்கிறோம்.

**பெறுபேறுகள்**

குமிழியின் முடிவுறும் கட்டத்தை போலியாகத் தயாரிப்பதற்காக நீர் இயக்கவியல் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட போலி மென்கலத்தின் உருவாக்கம் பூர்த்தி செய்யப்பட்டது. குமிழின் நிலைபேற்றை நிர்ணயித்தல் போன்ற புதிய முக்கியமான அமிசங்களும் (2 வெளிவிடும் நிலைபேறும் நிலையான நிலைபேறும்) மற்றும் பிறெம்ஸ்ராலுங்கினால் உருவாக்கப்படும் ஒளியின் அடர்த்தியின் கணிப்பும் மென்கலத்திற்குள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இத்துடன் கூடுதலாக பல்வேறு பயன்படுத்தல் ரீதியான நட்புறவு அமிசங்களும்கூட மென்கலத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது அது உற்பத்தி செய்யும் கட்டத்தில் உள்ளது. மென்கலத்தின் செம்மையை பரிசோதனை செய்வதன் பொருட்டு முன்னர் செய்யப்பட்ட ஒருசில பரிசோதனைகள் போலியாகத் தயாரித்தல் மென்கலத்தையும் சரியான பெறுபேறுகளையும் நடக்கைகளையும் பயன்படுத்தி முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில பரிசோதனைகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டு பெறப்பட்டுள்ளன.

மேலும் மென்கலத்துடன் சல்பியூரிக் அமிலத்தின் பல்வேறு செறிவுகளில் உள்ள அகவொளியிடல் ஒளியின் அடர்த்தியின் புறச்சூழ்நிலை வெப்பத்தின் தங்கியிருக்கும் நிலையை நாம் போலியாக தயாரித்துள்ளோம். நீரில் உள்ளதைப் போலன்றி ஒளியின் அடர்த்தியானது சல்பியூரிக் அமிலத்தின் உயர் செறிவிற்கான புறச்சூழ்நிலை வெப்பத்துடன் அதிகரிப்பதாகக் காணப்பட்டது. பெறுபேறுகள் படம் 1 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




மேலும் எமது ஆராய்ச்சிப் பிரிவில் உயர் செயலாற்றுகை கணிப்பும் பொத்து நிர்மாணிக்கப்பட்டதுடன் சமாந்தர நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தி அமைக்கப் பட்டது. 2 Ms windows ( windows 7) linux (ubuntu 12.04) கொத்துக்கள் நிறுவப்பட்டதுடன் MPI சமாந்தர நிகழ்ச்சித் திட்டங்ளைச் செயற்படுத்துவதற்காக ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தி அமைக்கப்பட்டன.



Hyper-Threading தொழினுட்பத்துடன் HPC கொத்துக்கள் மீது கணிப்பு திறமையின் செயலாற்றுகைத் தாக்கம் நிர்ணயிக்கப்பட்டது. கொத்தின் செயலாற்றுகை நியம Bench Mark பொறிகளுடன் மதிப்பிடப்பட்டது. windows மற்றும் linux தொழிற்பாட்டு முறைமைக்குமிடையிலான ஒப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன.




மிக நுட்பமான இலத்திரோனிக் கட்டமைப்பு முறைகளுடன் NO and OH = O <$NO_2$ H and NO + OH = O < NO + HO2 விற்கான உள்ளார்ந்த சக்திமேற்பரப்பின் விரிவான ஆய்வு நடாத்தப்பட்டது. இந்த ஆய்வு அகவொளிவிடல் குமிழிற்கு இடம் பெறும் கூடுதலான சிக்கல் வாய்ந்த அக இரசாயன எதிர்த் தாக்கங்களின் எதிர்தாக்க வீதங்களை ஆய்வு செய்வதற்கு எமக்கு உதவும்.

## 7.7.1.2 தனியொரு குமிழி அகவொளிவிடலில் பரிசோதனை ஆய்வு

ஆசிறி நாணயக்கார பிரபாத் ஹேரத்

தனியொரு குமிழ் அகவொளிவிடல் கருத்திட்டம் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம், கண்டி

**சுருக்கமான முகவுரை**

நீரிலுள்ள தனியொரு குமிழ் அகவொளிவிடல் நிறமாலைகள் அமிசமில்லாத Contonnuum வெளிவிடலை காண்பிக்கின்றது. சமீபத்தில் சல்பியூரிக் அமில்திலிருந்து பெறப்படும் தனியொரு குமிழி ஒளிபுகவிடல் என்பது நீரிலிருந்து தனியொரு ஒளிபுகவிடல் $10^3$ மடங்குகள் பிரகாசமாகமுடையனவாக இருப்பதுடன் இது அணு அயனிக் மற்றும் மூலக வெளிவிடல் வழிகளை வழங்குகின்றது. 2010 ஆம் ஆண்டில் பொஸ்போறிக் அமிலத்தில் உள்ள ஒலியியலால் இயக்கப்படும் நகரும் குமிழியிலிருந்து மிகவும் பலமான மூலக்கூற்று வெளிவிடுகையானது தூண்டப்பட்ட OH Radicals களில் இருந்து வெளிவிடப்படுவது அவதானிக்கப்பட்டது. ஆய்வாளர்கள் குமிழின் முடிவுறும் கடைசிக் கட்டங்களில் குமிழியின் வெப்பத்தை மதிப்பிடக்கூடியதாக இருந்தது. இந்தப் புதிய கண்டுபிடிப்புக்கள் தனியொரு குமிழி அகவொளிவிடலில் சிக்கலைக் காண்பித்துள்ளதுடன் நீர் தவிர்ந்த ஏனைய திரவங்களில் உள்ள தனி குமிழி அகவொளிவிடல் பற்றிய மேலதிக பரிசோதனை ஆய்வுகள் செய்யப்படுவதன் முக்கியத்துவத்தைக் காண்பித்துள்ளன.

**இலக்குகளும் குறிக்கோள்களும்**

இக்கருத்திட்டத்தில் சல்பூரிக் மற்றும் பொஸ்போறிக் அமிலங்களில் அவதானிக்கப்பட்ட நிறமாலை கோடுகளைப் போன்ற (அல்லது வித்தியாசமான கோடுகள்) கோடுகளை செலனிக் ($H_2Seo_4$) மற்றும் செலனியஸ் அமிலங்கள் ($H_2Seo_3$) போன்ற அமிலங்களில் அகவொளிவிடல் அவதானிக்கப் பட்டுள்ளவென்பதை பரிசோதனை மூலமாக கண்டுபிடிப்போம். மேலும் குமிழியின் முடிவடைதல் மாற்றத்தின் தொடக்க நிலைமைகளிலும் பௌதிக எல்லைகளிலும் சல்பியூரிக் மற்றும் பொஸ்போறிக் அமிலங்களுடன் ஒப்பிடும் போது மேற்போந்த இரண்டு அமிலங்களிலுமுள்ள தனியொரு அகவொளிவிடலின் அடர்த்தியும் நிறமாலை வழிகளும் ஒப்பிடப்படும் போது மாற்றமடைகின்றன என்பதை நாம் ஆராய்வோம். முதலாவது நடவடிக்கையாக நாம் சல்பியூரிக் மற்றும் பொஸ்போறிக் அமிலங்களில் உள்ள தனியொரு குமிழி அக பொறிவிடல் மீது விரிவான ஆய்வுகளை நடாத்துவோம். இது சல்பியூரிக் மற்றும் பொஸ்போறிக் அமிலங்களிலிருந்து பெறுப்படும் பெறுபேறுகளுடன் செலனிக் மற்றும் செலனியஸ் அமிலங்களிலிருந்து நாம் பெறும் பெறு பேறுகளுடன் ஒப்பிடுவதற்கு இது எமக்கு உதவி புரியும்.

**பெறுபேறுகள்**

தனியொரு குமிழி ஒளிபுகவிடல் என்பது எமது பரிசோதனைக்கூடத்தில் உள்ள நீருக்கும் சல்பியூரிக் அமிலத்திற்குமாகப் பிறப்பிக்கப்பட்டது. நாம் 85% சல்பியூரிக் அமிலத்தில் உள்ள நகரும் தனியொரு குமிழி ஒளி புகவிடலை வெற்றிகரமாக அவதானித்துள்ளோம். தனியொரு குமிழி அகவொளிவிடலின் போட்டோன் எண்ணிக்கை TMT குழாயையும் DAQ அட்டையையும் MAT LAB நிகழ்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்தி அவதானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் நுகரத் தக்க மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் காரணமாக நாம் சல்பியூரிக் அமிலத்தில் உள்ள குமிழிகளின் ஆரை அளவுகளையும் நுணுக்குக் காட்டி அளவீடுகளையும் ஆரை அளவீடுகளையும் செய்வதற்கு தேவைப்பட்ட மிகவும் முக்கியமான துணைக்கருவிகளை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருந்தோம். நாம் 2013 ஆம் ஆண்டில் இத்துணைக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

எனினும், பரிசோதனைக் கூடத்தில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள துணைக்கருவிகளுடன் நீரில் உள்ள தனியொரு குமிழி அகவொளிவிடலுக்கும் புளோரெசீன் சோடியம் கரைசல்களிலுமுள்ள Photon எண்ணிக்கைகளும் அவதானிக்கப்பட்டுள்ளன. இது நீரினால் உறிஞ்சப்பட்ட தனியொரு நீர்க் குமிழ் ஒளிபுகவிடல் நிறமாலையின் UV பகுதியை நாம் நிர்ணயிப்பதை இயலச் செய்யும். நீருக்கும் புளோரசீன் சோடியம் கரைசலுக்குமான வெப்ப சார்ந்திருக்கும் பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டது.

### 7.7.2 சத்திச்சொட்டு நிலையியக்கவியலும் சத்திச்சொட்டு நிலையியல் குழப்பம்

**கருத்திட்ட தலைவர்** : பேராசிரியர் ஆசிறி நாணயக்கார *(ஆராய்ச்சி பேராசிரியர் குழுத் தலைவர்.)*

**சுருக்கமான முகவுரை**

சமீபத்திய ஆண்டுகளில் சத்திச்சொட்டு நிலையியியக்கவியலில் குழப்பங்களின் உருவாக்கம் பெருமளவு அக்கறைக்குரிய விடயமாக இருந்தது. குறிப்பாக சத்திச்சொட்டு முறைமைகள் சிறந்த குழப்ப நிலையில் இருந்தமை விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சத்திச்சொட்டு நிலையியக்கவியலில் உள்ள குழப்பங்களின் விசேட அடையாளத்தைப் பற்றி ஆய்வு செய்வதன் பொருட்டு நாம் வெளிப்படையான முறையொன்றில் சத்திச்சொட்டு நிலையியகச்கவியலுக்குட' சிறந்த இயக்கவியலுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதற்காக பல்வேறு கொள்கை ரீதியானவைகளும் கணிப்பு ரீதியான முறைகளையும் உருவாக்கிக் கொண்டிருந்தோம். அத்துடன் இணையொத்த சிறந்த முறைமையில் உள்ள குழப்பங்கள் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள சத்திச்சொட்டு நிலையியயக்கவியல் அளவுகளைப் பற்றியும் கூட ஆய்வு செய்து கொண்டிருந்தோம்.

**இலக்குகளும் குறிக்கோள்களும்**

இக்கருத்திட்டத்தில் எமது இலக்கு என்னவெனில் ஓரளவு சிறந்த எல்லையில் பல்பரிமாண முறைமைகளின் நடக்கையைப் புரிந்து கொள்வதாகும். அதாவது சத்திச்சொட்டு நிலையியக்கவியலுக்கும் சிறந்த நிலையியக்கவியலுக்கும் இடையேயுள்ள எல்லை. அத்துடன் ஹேமிட்டியன் மற்றும் ஹேமிட்டியன் அல்லாத ஹமில்ரோனியன் முறைமைகளின் சிறந்த, ஓரளவு சிறந்த மற்றும் சத்திச்சொட்டு நிலையியக்கவியல் நடக்கை ஆகியன பற்றியும் புரிந்து கொள்வது எமது நோக்கமாகும்.

**பெறுபேறுகள்**

இக்கருத்திட்டமானது அது தொடங்கப்பட்ட டகாலத்திலிருந்து 31 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் 3 ஆராய்ச்சி தொடர்பாடல்களையும் செய்துள்ளது.

1. I - D முறைமைகளுக்காக புதிய சக்திவாய்ந்த கோட்டு சக்தி விரிவாக்கல் முறையொன்று உருவாக்கப்பட்டது. இந்த முறை சக்தியில் உள்ள மாறுபடத்தக்க J சத்திச்சொட்டு நடவடிக்கையின் சக்தித் தொடர் விரிவாக்கலை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் இது பரந்த அளவிலான உள்திறன்களுக்கு பிரயோகிக்கப்படலாம். மேற்போந்த முறையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லைக்கோட்டு முழுமையாக்கங்கள் WKB முறைகளில் உள்ளவற்றை விட மிகவும் எளிதானவைகளாகும். 2012 ஆம் ஆண்டின் எமது ஆராய்ச்சிப் பிரிவினால் உருவாக்கப்பட்ட சமாந்தரக் கோட்டு விசாலிப்பு முறைகளை பயன்படுத்தி ஹேமிட்டியன் முறைகளல்லாத முறைகளை ஆய்வு செய்து நாம் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். நாம் முன்னர் தெரிந்திராத ஹேமிட்டியன் முறைமைகளை கண்டுபிடித்துள்ளோம். இவை ஹேமிட்டியன் PT சமச்சீர் முறைகளல்லாத பகுப்பின் அதே சத்திச்சொட்டு நிலையியல் நிறமாலைகளை வைத்திருக்கின்றன.

2. 2012 ஆம் ஆண்டில் விஞ்ஞான எடுத்துக்காட்டல் அட்டவணையிடப்பட்ட சஞ்சிகைகளில் ஹேமிட்டியன் முறைகளல்லாத முறைமைகள் மீது ஐந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. வெளியீட்டிற்காக நாம் விஞ்ஞான எடுத்துக் காட்டல் அட்டவணையிடப்பட்ட சஞ்சிகைகளுக்கு கூடுதலாக மூன்று ஆராய்ச்சி கையெழுத்து கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளோம். கடந்த பல ஆண்டுகளில் இக்கருத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் ஐக்கிய இராச்சியல்தில் உள்ள லண்டன் சிற்றிப் பல்கலைக்கழகத்தில் கணித விஞ்ஞானத்திற்கான நிலையத்தில் உள்ள பேராசிரியர் அன்றியா பிறிங் அவர்களிடமிருந்து அவருடைய ஆராய்ச்சித் தொகுதியினருடன் உடனுழைக்க வருமாறு நாம் அழைப்பொன்றைப் பெற்றுள்ளோம்.

M.Phil : மாணவர் திலகராஜா மதன ரஞ்சன்



**மனிதவள அபிவிருத்தி**

M.Phil மாணர்கள் (ஆராய்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 1. | Prabhath Herath | - | PGIS, University of Peradeniya |
| 2. | Mr.Thilagarajuas Mathanarranjan | - | PGIS, University of Peradeniya |
| 3. | Mr.Manoj Wijessingha | - | PGIS, University of Peradeniya |



## 8. உசாவுத்துணை மற்றும் கூட்டிணைப்பிரிவு (CCD)

**கூட்டிணைவாளர்; பேராசிரியர் எஸ். ஏ. குலசூரிய** (வருகை ஆராய்ச்சி பேராசிரியர்)

மீளாய்வுக்குட்பட்ட காலத்தில் உசாவுத்துணை மற்றும் கூட்டிணைப்பிரிவின் கீழ் அடங்கும் கூட்டிணை செயற்பாடுகளின் வளர்ச்சியானது குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவு திருப்திகரமாகவுள்ளது. வருட காலத்தில் தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் முன்கொண்டு செல்லப்பட்ட அதே வேளையில் முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்டு ஆனால் முடிவிற்கு கொண்டுவரப்படாத நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. வெளி அமைப்பான்மைகளுடனான இடை உறவுகள் தொடர்பில் இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டவை மட்டுப்படுத்தப்படும். வேறுபட்ட தலைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினது பெறுபெறுகள் அந்தந்த அலகினால் ஆய்வுகளை முன்னெடுத்தவர்களால் முன்வைக்கப்படும்.

### முன்னைய ஆண்டிலிருந்து தொடரப்படும் கருத்திட்டங்கள்

1. **இயற்கை அழகு ஆக்கத்திரனுடன் கூட்டிணைந்து. தேயிலைக்கான உயிர்படலம் - உயிர்ப்பசளை பற்றிய PLC**
   அ.க.நி விஞ்ஞானி: பேராசிரியர் காமினி செனவிரத்ண மற்றும் பேராசிரியர் எஸ். ஏ. குலசூரிய.

   முன்னோடி மட்ட தொழில்பாடுகள் நிமித்தம் தனிப்பட்ட அலகாக ஓர் புறத்தில் நிர்மாணிக்கப்பட்ட தனிப்பட்ட கட்டிடத்தில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இயந்திரம் நிறுவப்பட்டது. தேயிலை தொடர்பில் அநேக சோதனை ஓட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆரம்பக் கட்டத்தில் ஏற்படக்கூடிய ஒருசில பிரச்சனைகள் ஏற்பட்ட போதிலும் அப்பிரச்சனைகளாவன வெற்றிகொள்ளபட்டு. inoculants தொடர்பில் கள சோதனையானது NBC வளாகத்தில் TRI யினைச் சேர்ந்த ஆனந்த ஜயசேகரவினால் முன்னெடுக்கப்படுதல். நுண் உயிரியல் உயிர் தொழில்நுட்ப அலகின் கீழ் ஆராய்ச்சி பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன.

2. **நுண் உயிரியல் மற்றும் மூலக்கூற்றுக்குரிய typing முறையுடன் காசநோய் மைக்ரோ பக்றீறியாவை கண்டுபிடித்தல்.**
   அ. க. நி. விஞ்ஞானி: கலாநிதி டி. என். மக்னா ஆராச்சி, இணை விஞ்ஞானி: கலாநிதி. ஆர். எம். டி. மெதகேதர, பௌதீகவியலாலர், சுவாசத்தொகுதி அலகு, போதான வைத்தியசாலை, கண்டி.

   இவ்விடயம் தொடர்பில் 2012ம் ஆண்டு காலப்பகுதியில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுகின்றது. கருத்திட்டமானது வெற்றிகரமான பாதையில் நகர்கின்றது. இவ்விடயம் தொடர்பிலான பெறுபேறுகளாவன கல உயிரியல் அலகின் ஊடாக முன்வைக்கப்படுகின்றது.

3. **தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பினால் முன்வைக்கப்படும் கருத்திட்டம்.- இலங்கையில் உள்ள நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர் வளங்கள் மூலகங்களில் இருந்து நீர் வழங்கள் திட்டங்களுக்கு வழங்கப்படும் நீரில் உள்ள algal நஞ்சும் அந்த நீரின் தரமும்.**
   அ. க. நி. விஞ்ஞானி: திரு. ஜே. டி. பத்மசிறி, கலாநிதி. டி. என். மக்னா ஆராச்சி மற்றும் பேராசிசரியர். எஸ். ஏ. குலசூரிய.

   கூட்டிணைவாளர்கள்: கலாநிதி. எஸ். யடிகம்மான, விலங்கியல் திணைக்களம், பேராதெனிய பல்கலைக்கழகம் மற்றும் கலாநிதி. எஸ். கே. வேரகொட, NWSDB.
   ஆராச்சி உதவியாளர்: திருவதி. புத்திக பெரேரா.

   வரையறுக்கப்பட்ட ஸ்பெக்ரோ நிறுவகத்துடன் கூட்டிணைந்து திரு. பத்மசிறி அவர்களால் கனிசமான எண்ணிக்கையான கிராமிய மட்டத்திலான நீர் தூய்மைப்படுத்தல் அலகு நிறுவப்பட்டது. திரு புத்திக பெரேரா நடாளாவிய ரீதியில் இலங்கையின் சகல விவசாய சூழலியல் வலயங்களை உள்ளடக்கியதாய் 61 நீர்த்தேக்கங்களை அளவளாய்வு செய்ததுடன் அவற்றின் phyto மற்றும் zooplanktons பதிவு செய்தார். நுவரெலியா மாவட்டத்திற்கு நீர்த்தேக்கங்களின் பதிவுகள் முதல் தடவையாக சைநோ பக்றீறியா நஞ்சின் பதிவினை காட்டியது. அத்துடன் இவ்விடயந்தொடர்பில் கலாநிதி மக்னா ஆராச்சியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் algal நச்சு மற்றும் மைக்ரோசிஸ்டின், cylindrospermopsins என்பன நீர் மாதிரிகளில் இருப்பதை உறுதிப்படுத்தியது.

இவ்விடயம் தொடர்பிலான ஆராய்ச்சி பெறுறேுகளாவன நீர்த்தர அலகு, கல உயிரியல் அலகு மற்றும் சூழலியல் உயிரியல் அலகுகளினால் முன்வைக்கப்பட்டது.

4. **நோய்க்காரணி அறியாத குரோனிக் சிறுநீரக நோயினை வடமேற்கு மாகாணத்தில் இல்லாதொழிப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விருத்தி.**

அடிப்படை கற்கைகள் நிறுவக விஞ்ஞானிகள்: திரு. ஜே. பி. பத்மசிறி, பேராசிரியர். எஸ், ஏ. குலசூரிய மற்றும் கலாநிதி டி. என். மக்னா ஆராச்சி.

கூட்டிணைப்பாளர்கள்: கலாநிதி. ஆர். என். எஸ். கே. ரத்நாயக்க, சுகாதார சேவையின் மாகாணப் பணிப்பாளர் மற்றும் ஏனைய மாகாண மருத்துவ அலுவல்கள், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் விஞ்ஞானிகள், வயம்ப பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பதவியணி உறுப்பினர்கள். நோய்க்காரணி அறியாத குரோனிக் சிறுநீரக நோய்க்கு எளிதில் ஆட்படக்கூடிய சனத்தொகையினரின் வேறுபட்ட காரணிகளையும் மற்றும் அவர்களின் சமூக பொருளியல் தகுநிலையினையும் உள்ளடக்கியதாய் கருத்திட்ட பிரேரணையானது தயாரிக்கப்படுவதற்கு அடிப்படை கற்கைகள் நிறுவனத்தின் விஞ்ஞானிகள் தனது பங்களிப்பை வழங்கினர். இந்நோயினால் பாதிக்கப்பட்ட சனத்தொகையினரால் பயன்படுத்தப்படும் நீர் மூலகங்களில் இருக்கின்ற algal நஞ்சு மற்றும் அந்த நீரின் தரம் தொடர்பில் அடிப்படை கற்கைகள் நிறுவகத்தில் ஆராய்ச்சி பணிகளை முன்னெடுப்பதற்கு குறிப்பிட்ட நிதியத்தின் ஒரு பகுதி பாவிக்கப்பட்டது.

5. **இலங்கையில் மேம்படுத்தப்பட்ட பொருளாதாரம் மற்றும் சூழலுக்கு நுண் உயிரியல் உயிர்ப் பசளையின் பயனுறுதிமிகு பாவனை.**

அடிப்படை கற்கைகள் நிறுவக விஞ்ஞானிகள்: பேராசிரியர். காமினி செனவிரட்ண மற்றும் பேராசிரியர். எஸ். ஏ. குலசூரிய.

கூட்டிணைப்பாளர்: பேராசிரியர். ஐவன் கனோலின், சிட்னி பல்கலைக்கழகம். ABN 15 211 513 464, Sydney, NSW 2006, Australia.

வரையறுக்கப்பட்ட Plenty Foods தனியார் நிறுவகத்தைச் சார்ந்த தெரிவு செய்யப்பட்ட கள அலுவலர்க்காக உயிர்படலம் - உயிர்ப்பசளை என்பனவற்றின் பாவனை மற்றும் தரக்கட்டுப்பாடு தொடர்பில் அடிப்படை கற்கைகள் நிறுவனத்தின் ஒரு விழிப்புணர்ச்சி பயிற்சிக் பட்டறையானது முன்னெடுக்கப்பட்டதுடன் சோளம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சில தானியங்கள் தொடர்பில் கள சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன கமக்காரர்கள் அரிசி உட்பட வேறுபட்ட தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் விஸ்தரிப்பு சேவைகளுக்காக, அரச விவசாய திணைக்களத்தின் விவசாய வியாபார முயற்சிகள் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களான “கொவி பியச” முகாமையாளர்களுடன் களசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள் தொடர்பிலும் கள சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக விவசாய திணைக்களத்தின் பல விஸ்தரிப்பு அலுவலகங்களுக்கு அடிப்படை கற்கைகள் நிறுவனத்தைச் சார்ந்த பிராந்திய முகவர்கள் விஜயம் செய்வதுடன் இக்கருத்திட்டம் தொடர்பிலான கள சோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்கு விவசாய வியாபார முயற்சிகள் பிரிவின் சோதனை அலுவல திரு. திலக ரட்ணவுடன் கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டன.

அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் செயலாளரின் இடையீட்டின் ஊடாக வயப மாகாணத்தின் மாகாண விவசாய அமைச்சருடனும் அவரின் அலுவலர்களுடனும் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. இக்கலந்துரையாடல்களாவன ஆணமடுவ, கல்கமுவ மற்றும் மஹாவ ஆகிய பிரதேசங்களில் வேறுபட்ட தாவரங்ள் நடுதல் தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கைகளை தாபித்தல் என்பதைப் பற்றியதாகவும் அமைந்தது.

6. **Rhizobial Inoculants ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி வசதி (RIRPF)**

பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் நிறுவகத்தில் இருந்து அடிப்படை கற்கைகள் நிறுவகத்திற்கு வந்த பின்பு RIRPF ஆனது, மகாவலி அதிகார சபையின் Plenty Foods இனால் 2500 ஏக்கரில் மேற்கொள்ளப்படும் சோயா பீன் வேளாண்மைக்கும் மற்றும் சிறிய அளவிலான வேளாண்மைச் செய்யும் கமக்காரர்களுக்கு யால போகத்தின் போதும் 2012ம் ஆண்டில் 2500 inoculants இனை விநியோகிக்க்கூடியதாக இருந்தது. வழமையாக inoculants இன் தேவைப்பாடானது மகா போகத்தில் மிகவும் குறைவாகும் ஏனெனில், அடுத்த யால போகத்தில் பயன்படுத்தல் பொருட்டு சோயா பீன் வேளாண்மையானது விதைத் தேவைக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. இந்த மகா போகத்தைப் பொறுத்தவரையில் எதிர் பார்க்காதவாறு கிட்டத்தட்ட 900 ஏக்கர் சோயா பக் நிலப்பரப்புக்கு ஏற்றவாறு inoculants விநியோகிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் நோக்குமிடத்து 2013ம் ஆண்டின் யால போகத்தின் எமது இலக்கானது கிட்டதட்ட 30000 ஏக்கர்களாக அமையலாம். இந்த உயர் கேள்வி ஏற்படுவதற்கான காரணம் இலங்கையில் சோயா பீன் இறக்குமதியை நிற்பாட்டுவதற்கு அரசினால் எடுக்கப்பட்டது கொள்கை தீர்மானமாகும். இக்கருத்திட்டம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட முதல் வருட செயற்பாடுகளை நோக்கின் இதன் மூலம் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 942,030.00 ஆக இருக்கும் அதே வேளையில் தனிப்பட்ட வேதனாதிகள் உள்ளடங்கலாக செலவிடப்பட்ட செலவீனம் ரூபாய் 574,174.40 ஆகும்.

Rhizobial Inoculants உற்பத்தி வசதியினை குறிக்குமுகமான ஒரு நிகழ்வொன்று 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்றது. இந்நிகழ்வின்பேது நிலைபெறுதகு விவசாயத்திற்கான *Root Nodule Bacteria* பற்றிய சர்வதேச மானி வகுப்பு ஒன்றினை நடாத்துவதற்கு அடிப்படை கற்கைகள் நிறுவகத்திற்கு நடாத்தப்பட்டது. இந்த வகுப்பானது வட அவுஸ்திரேலியாவின் மேடோக் பல்கலைக்கழகத்தின் ரிஹிசோபியம் கற்கைகளுக்கான நிலையத்தின் கூட்டிணைவுடன் நடாத்தப்பட்டது. இவ்வகுப்பிற்கு தேவையான போதனா நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்குரிய வள ஆளணியினராக வட அவுஸ்திரேலியாவினைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்ட அதே வேளையில் உள்ளூர் வள ஆளணியினராக பேராசிரியர் எஸ். ஏ. குலசூரிய மற்றும் காமினி சேனவிரட்ண ஆகியோர் கலந்துகொண்டனர். இவ்விடயம் தொடர்பில் வெளிநாட்டில் பயிற்சியினைப் பெறுவதற்கு மொத்தம் 11 பேர் கலந்துகொண்டனர் இதில் ஆப்பிரிக்கா நாட்டைச் சேர்ந்த எட்டு பேரும் ஏனையோர் இலங்கை உட்பட்ட ஆசிய நாட்டைச் சேர்ந்தோர் ஆவர். இந்நிகழ்ச்சித்திட்டமானது அதி குறைந்த இரசாயன பாவனையுடன் நிலைபெறுதகு தாவர உற்பத்திக்கு துணைமை செய்யும் முகமாக மண் வளத்தினை மேம்படுத்துதல் தொடர்பிலாகும். இத்தகைய ஒரு கருத்திட்டம் குறிப்பாக நுண் உயிரியலாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இக் கருத்திட்டத்தில் பங்கு கொண்டவர்கள் அடிப்படை கற்கைகள் நிறுவகத்தைச் சார்ந்த ஒரு விஞ்ஞானியும் மற்றும் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆவார்கள்.

கீழ்வரும் நிழற்படங்கள் பல் நுண் உயிரியல் inoculants இனது பிரயோகிப்பின் பின்னர் களசெயற்பாடுகளைக் காட்டுகின்றது.



அதீத உணவு கள பதவியணியினருடன் பயிற்சிப்பட்டறை



பியச முகாமையாளருடன் குழு படம்



பதவிய கமக்காரர்களுடன் பயிற்சிப்பட்டறை



மஹாஇலுப்பம கள பயிற்சிப்பட்டறை



வயம மாகாண விவசாய அமைச்சருடன்



யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



வவுனியாவிற்கு விஜயம்



கிளிநொச்சியில் வேளாண்மை

எம்முடன் கடந்த 7 வருட காலமாக தாவரவியல் திணைக்களம், பேராதெனிய பல்கலைக்கழகம், நுண் உயிரியல் திணைக்களத் தலைவர், களனி பல்கலைக்கழகமும் அதன் முகாமையாளரும் தனியார் கம்பனியான Plenty foods இலிருந்து விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியோர் நமக்கு துணையாக இருந்தனர். இவர்கள் நுண் உயிரியுடன் தொடர்புடைய கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பதவியணியினருக்கு அண்மித்த தொழில்நுட்பங்கள் தொடர்பிலும் அவற்றின் பாவனை தொடர்பிலும் திறன் மற்றும் அறிவினை வழங்கினர். இந்த நிகழ்ச்சித்திட்டமானது சர்வதேச விவசாய ஆராய்ச்சிக்கான அவுஸ்திரேலியா மன்றமான Crawford Fund, இனாலும் ஐக்கிய இராஜ்ஜியத்தின் Kirk House Trust இனாலும் நிதியீடு செய்யப்பட்டது.



Group photo of the Master Class on Root Nodule Bacteria

7. **கொழும்பிலுள்ள மகாத்மா காந்தி நிலையத்துடன் கூட்டிணைந்து இலங்கையில் பின் தங்கிய கிராமங்களில் குறைந்த செலவினத்தினால் ஆன உள்ளீடாகவும் சுய துணைமை கூட்டுமுயற்சி என்ற அடிப்படையில் பாரிய அளவில் *Spirulina* இனை வளர்த்தல்.**

அ. க. நி. விஞ்ஞானி: பேராசிரியர் எஸ். ஏ. குலசூரிய, கலாநிதி டி. எம். மக்னா ஆராச்சி மற்றும் கலாநிதி. ருவினி லியனகே.

கூட்டிணைப்பாளர்கள்: திரு. அர்ஜூன அலுகல மற்றும் மேஜர் ஜென்ரால். (ஓய்வு பெற்றவர்) கமால் பர்னாந்து, மகாத்மா காந்தி நிலையம் (MGC), கொழும்பு.

வரையறுக்கப்பட்ட ஸ்வேயாங் வட்டகெதர இனைச் சேர்ந்த ஜென்ரால் பர்னாந்து "இலங்கையில் பின்தங்கிய கிராமங்களைச் சார்ந்த பிள்ளைகள், கர்பிணித் தாய்மார்கள் மற்றும் பால்கொடுக்கும் தாய்மார்களின் போஷணையில்லா குறைப்பாட்டிலிருந்து அவர்களை மீளெழும்பச் செய்வதற்கு alga Spirulina இனை வளர்த்தல்" எனும் தலைப்பிலான விண்ணப்பத்தை தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப மானிய திட்டத்தின் கீழ் அடிப்படை கற்கைகள் நிறுவகத்தை நிறுவன ரீதியிலான பங்காளர்களாகச் சேர்த்துக்கொண்டு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு சமர்ப்பித்தார். அவரின் இந்த ஆய்வுக் கட்டுரையானது மிகு ஏற்புடையதொன்றாக கருதப்பட்டு மேலதிக பரிந்துரைப்பின் பொருட்டு குறும்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தேசிய விஞ்ஞான மன்றத்தினால் இந்த ஆய்வுக் கட்டுரையில் காணப்பட்ட நோயியல் பக்றீரியா மற்றும் ஊட்டத்திறன் மற்றும் alga Spirulina வினால் உற்பத்தி செய்யப்படும் நச்சு போன்ற ஒரு சில விடயங்கள் தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன இதற்கான பதில்கள் அடிப்படை கற்கைகள் நிறுவகத்துடன் தொடர்பு கொண்டு வழங்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பிலான மானியமானது 2012ம் டிசம்பர் மாதம் 17ம் திகதி வழங்கப்பட்டது. Spirulina ஆய்வுகூட மட்டத்து வளர்ச்சியானது தற்போது அடிப்படை கற்கைகள் நிறுவகத்திலும் மகாத்மா காந்தி நிலையத்தின் வட்டகெதர கிராம நிலையத்திலும் முன்னெடுக்கப்படுகின்றது.

8. **அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் மாற்றுச் சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அலகிற்கும் மற்றும் தாய்லாந்தில் உள்ள பாங்க் கொக்கினை சார்ந்த மகிடோல் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கூட்டிணைவு**.

அ. க. நி. விஞ்ஞானி: கலாநிதி தீபால் சுபசிங்க,
கூட்டிணைவாளர்: பேராசிரிய வீராச்சை சிரிப்புன்வரப்போன், செயல்திட்ட தலைலர் எம். யூ.

அடிப்படை கற்கைகள் நிறுவகத்தில் இருந்து பங்குகொண்ட ஆராய்ச்சி மாணவர்கள்: திரு. என். வி. சூரியஆராச்சி மற்றும் திரு. டி. பி. நிமால்சிறி.

முன்னெடுத்து செல்லப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றமானது தற்காலிகமாக இடை நிறுத்தப்படுவதற்கு காரணம் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குகொண்ட அடிப்படை கற்கைகள் நிறுவகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி உதவியாளர் ஆறு மாதங்களுக்கு தாய்லாந்து நாட்டிற்கு வெளிநாட்டுப்பயணம் சென்றதினால் ஆகும்.

9. **இலங்கையிலுள்ள அணுசக்தி அதிகார சபையுடன் கூட்டிணைந்து ராடன் வரைப்பட கருத்திட்டம்.**

அ. க. நி. விஞ்ஞானி: கலாநிதி தீபால் சுபசிங்க,

கூட்டிணைவாளர்: திரு. பிரசாத் மஹாகுமார

சிரேஷ்ட விஞ்ஞான அலுவலர், அணுசக்தி அதிகார சபை. மற்றும் பேராசிரியர் டி. லிமோட்டோ, NIRS டோக்கியோ பல்கலைக்கழகம்.

NIRS இனால் நன்கொடையாக வழங்கப்பட்ட ராடன் கண்டுபிடிப்பிகளின் முதல் தொகுதியானது ஏற்கனவே தீர்மானம் செய்யப்பட்ட இடங்களில் நிறுவப்பட்டது. கோரப்பட்ட காலவரையரையின் முடிவுக்கு முன்பாகவே இந்த கண்டுபிடிப்பிக்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பதிவு செய்யப்பட்ட தரவுகளாவன பகுப்பாய்வின் பொருட்டு ஜப்பானிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பாடம் கண்டுபிடிப்பிகளின் செவ்வியத்தன்மை மற்றும் ராடன் மட்டங்கள் என்பனவற்றை பரிசீலனை செய்வதற்கு பேராசிரியர் லிம்டோ இலங்கைக்கு விஜயம் செய்தார். இக்கருத்திட்டம் தொடர்பிலான இரண்டாம் கட்ட நடவடிக்கையானது 2013ம் ஆண்டிலும் தொடரப்படும்.

## கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள புதிய கருத்திட்டங்கள் தொடர்பில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட Plenty Foods தனியார் நிறுவனத்தின் கமக்காரரால் வளர்க்கப்படும் சோளம், தானிய வகைகள் தொடர்பில் MMBF ஆய்வுகளை விஸ்தரித்தல்.
- இலக்கு செய்யப்பட்ட தாவர பயிர்களுடன் கூட்டிணைந்த வகையில் பல் நுண் உயிரியல் inoculants இனது செயற்பாட்டிணை புரிந்துகொள்வதற்கு அடிப்படை ஆய்வுகளை நடாத்துவதற்கு சமதானியங்களை பிரயோகித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள அணுசக்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல். inoculants இன் நோய் நுண்ம நீக்கம் நிமித்தம், வீசிகதிர் வீழளினை பயன்படுத்துதலும் இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டது.
- தெங்கு பயிர்ச்செய்கையின் பல் நுண் உயிரியல் inoculants பிரயோகம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு குருனாகல தோட்டப்பயிர்ச்செய்கையுடனான உடன்படிக்கை.
- அம்பேவலையில் உள்ள கால்நடை வளர்ப்புக் கம்பனியானது அவர்களின் பால்ச்சர் முறைக்கு பயன்படுத்தப்படும் கராம்பில் நைதரசன் பாவனையை மேம்படுத்துவதற்கு rhizobial inoculants பிரயோகம்:

- வேறுபட்ட உணவுத் தாவரங்களுக்கு பல் நுண் உயிரியல் inoculants பிரயோகம் பற்றிய விசேட கருத்திட்டங்களை மாணவர்கள் தொடங்குவதற்கு வரையறுக்கப்பட்ட அக்குவைனாஸ் பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை.
- கதிரியல் விஞ்ஞான தேசிய நிறுவகம் மற்றும் ஜப்பானில் உள்ள டொக்கியோ பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்து அணுசக்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் ராடன் வரைப்படக் கருத்திட்டம்.

மேற்கூறப்பட்ட உடன்படிக்கைகள் யாவும் கடந்த சில மாதங்களுக்குள்ளேயே கைச்சாத்திடப்பட்டது. இவற்றின் மூலம் ஆராய்ச்சி பெறுபேறுகள் ஏதேனும் பெறப்படின் அவை நுண் உயிரியல் உயிர்த்தொழில்நுட்ப அலகின் அறிக்கையினூடாக முன்வைக்கப்படும்.

## 09. 2012ம் ஆண்டிற்குரிய விருதுகள், அங்கீகரிப்புக்கள் மற்றும் காப்புரிமைகள்

1. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேவ மாநாடுகளுக்கு உறையாற்றவும் தவிசாளர் எனன்ற அடிப்படையிலும் **பேராசிரியர். எம்.ஏ.கே.எல். திசாநாயக்கா** என்பவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
    - Solid state Ionics (ACSSI – 2012) என்னும் தலைப்பில் 13வது ஆசிய மாநாடு ஜப்பானில் சென்டை என்னும் இடத்தில் 2012ம் ஆண்டு ஜூலை மாதம் 17-20ம் திகதி வரை இடம்பெற்றது.
    - உயர் திரவியம், விஞ்ஞானம் மற்றும் எந்திரவியல் (ICAMSC 12) என்னும் தலைப்பில் முதலாவது சர்வதேச மாநாடு இலங்கையில் கொழும்பில் 2012ம் ஆண்டு ஜூலை மாதம் 01-04ம் திகதி வரை இடம் பெற்றது.

2. இலங்கை பௌதிகவியல் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய பௌதிகவியல் ஒலிம்பிக் மற்றும் தேசிய வானியல் ஆராய்ச்சி ஒலிம்பிக் போட்டிகளில் 2012ம் ஆண்டிற்குரிய வருடாந்த விருது வைபவத்தில் பேராசிரியர் **எம்.ஏ.கே.எல். திசாநாயக்கா** என்பவர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார் இந்த வைபவமானது 2012 நவம்பர் மாதம் 23ம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

3. **கலாநிதி எம்.சி.எம் இக்பால்**
    - 2012 மார்ச் மாதம் 26-29ம் திகதி வரை ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள இலண்டனில் இடம் பெற்ற அமுக்கத்தின் கீழ் கோள் என்ற மாநாட்டில் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டார்.
    - 2012ம் ஆண்டில் இலங்கையின் ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கின் பிரதான உரையை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டார்.

4. தேசிய உற்பத்திகள் இரசாயனம் என்னும் தலைப்பில் பாகிஸ்தானில் உள்ள கராச்சி என்னும் இடத்தில் செப்டெம்பர் மாதம் 22-25ம் திகதி வரை இடம் பெற்ற 13வது சர்வதேச மநாட்டில் உரையாற்றுவதற்கு **பேராசியர் யூ.எல்.பி. ஜயசிங்க** என்பவர் அழைக்கப்பட்டார்.

5. தேசிய உற்பத்திகள் இரசாயனம் என்னும் தலைப்பில் பாகிஸ்தானில் உள்ள கராச்சி என்னும் இடத்தில் செப்டெம்பர் மாதம் 23ம் திகதி மதிய நேரத்தில் இடம்பெற்ற 13ம் சர்வதேசக் கருத்தரங்கில் **பேராசிரியர் யூ.எல்.பி. ஜயசிங்க** தலைமைத்துவத்தை வகித்தார்.

6. அயர்லாந்தில் டுப்ளின் என்னும் இடத்தில் உள்ள பல்கலைக்கழக கல்லூரியில் தேசிய உற்பத்திகள் பற்றிய வாய்மொழி மூலமான பரீட்சையின் போது **பேராசிரியர் யூ.எல்.பி. ஜயசிங்க** பி,எச்.டி மாணவர்களுக்கான விசேட வெளி பரீட்சையாளராக சேவையாற்றினார்.

7. இலங்கையில் பெலிஓயா என்னும் இடத்தில் உள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருந்து கண்டுபிடிப்பு என்னும் தலைப்பில் 2012, ஜனவரி மாதம் 5ம் திகதி இடம்பெற்ற சர்வதேச கருத்தரங்கில் **பேராசிரியர் யூ.எல்.பி. ஜயசிங்க** உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டார்.

8. இலங்கை தேசிய விஞ்ஞான கல்வியகத்தில் இணையுரிமையாளராக **பேராசிரியர் யூ.எல்.பி. ஜயசிங்க** தேர்வு செய்யப்பட்டார்.

9. 2012ம் ஆண்டில் இலங்கை இரசாயன நிறுவகத்தினால் கொழும்பில் ஜூன் மாதம் 22ம் திகதி இரசாயன விஞ்ஞானம் என்னும் தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச மாநாட்டில் உரையாற்றுவதற்கு பேராசிரியர் என். எஸ். குமார் அழைக்கப்பட்டார்.

10. இந்தியாவில் கர்நாடகம் என்னும் இடத்தில் உள்ள எந்திரவியல் தொழில்நுட்பத்திற்கான ஶ்ரீதேவி நிறுவகத்தில் 2012, ஜூன் மாதம் 8-9ம் திகதிகளில் ஆராய்ச்சி மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட உயிர்த்தொழில்நுட்பம் பற்றிய ஆய்வு என்னும் தலைப்பிலும் உயிர் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு கற்பவர்களைத் தூண்டல் என்னும் தலைப்பிலுமான சர்வதேச மநாட்டில் பிரதான உரையாற்றுனராக கலந்துகொள்வதற்கு **பேராசிரியர் என். எஸ். குமார்** அழைக்கப்பட்டார்.

11. பாக்கிஸ்தானில் கராச்சியில் 22-25ம் திகதி வரை தேசிய உற்பத்திகள் இரசாயனம் என்னும் தலைப்பில் இடம்பெற்ற 2012ம் ஆண்டின் 13வது சர்வதேச மநாட்டில் உரையாற்றுவதற்கு **பேராசிரியர் என். எஸ். குமார்** அழைக்கப்பட்டார்.

12. பாக்கிஸ்தானில் கராச்சியில் 22-25ம் திகதி வரை தேசிய உற்பத்திகள் இரசாயனம் என்னும் தலைப்பில் இடம்பெற்ற 2012ம் ஆண்டின் 24வது சர்வதேச மநாட்டில் உரையாற்றுவதற்கு **பேராசிரியர் என். எஸ். குமார்** அழைக்கப்பட்டார்.

13. திருவதி மதுனிமதநாயக்க அவர்கள் அலெக்சாண்டர் என்பவரினால் இணையுரிமைக்கு தெரிவு செய்யப்பட்டார்.
14. டி.என். மக்கனஆராச்சி சர்வதேச மாநாட்டில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டமை ஓர் அங்கீகாரம் ஆகும். அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் அண்மைக்கால போக்குபற்றிய சர்வதேச மாநாடு - இந்தியாவில் கேரளா என்னும் இடத்தில் உள்ள ஶ்ரீ புத்த எந்திரவியல் கல்லூரியில் 2012ம் பெப்ரவரி மாதம் 23-25ம் திகதி வரை இடம் பெற்றது.

15. கூட்டினைப் **பேராசிரியர் ரோஹான் சந்தீப** 2012 நவம்பர் மாதம் 21-23ம் திகதி வரை தருசாம், புருநெய் என்னும் இடத்தில் இடம் பெற்ற சர்வதேச மாநாட்டில் பிரதான உரை நிகழ்த்துபவராக கடமையாற்றல்.

16. இலங்கை புவி சரிதவியல் சங்கத்தின் சஞ்சிகையின் இரு இணைபதிப்பாசிரியர்களுள் ஒருவராக **கலாநிதி என்.டி. சுபசிங்க** அவர்கள் அச்சங்கத்தின் வருடாந்த கூட்டத்தொடரில் தெரிவு செய்யப்பட்டார்.

17. இலங்கை தேசிய விஞ்ஞான கல்வியகத்தின் இணையுரிமையாளராக **பேராசிரியர் ஜி. செனவிரட்ண** தெரிவுசெய்யப்பட்டார்.

18. 2012ம் செப்டெம்பர் மாதம் சீனாவில் உள்ள கியான்ஜிம் என்னும் இடத்தில் இடம்பெற்ற விஞ்ஞானத்திற்கான மூன்றாம் உலக கல்வியகத்தின் இணையாளராக **கலாநிதி மெத்திகா விதானகே** தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டார்.

19. 2012ம் செப்டெம்பர் மாதம், மெட்ராசில் உள்ள ஐ.ஐ.டியில் தண்ணீர் பேணுகைக்கு நெநோ தொழில்நுட்பம் என்னும் தலைப்பிலான முதலாவது சர்வதேச மநாட்டில் **மெத்திகா விதானகே** அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டார்.

20. 2012ம் டிசம்பர் மாதம் கொரியாவில் அனர்த்த மதிப்பீட்டு மநாட்டில் உரையாற்றுவதற்கு **கலாநிதி மெத்திகா விதானகே** அவர்கள் உரை நிகழ்த்துவதற்கு அழைக்கப்பட்டார்.

21. **கலாநிதி மெத்திகா விதானகே** - ராஜபக்ஷ என்பவரினால் ஜியோடெமா என்னும் சஞ்சிரகையில் பிரசுரிக்கப்பட்ட ஆவணமானது 2012ம் ஆண்டு இறக்கம் செய்யப்பட்ட சகல ஆவணங்களையும் விட எண்ணிக்கையில் உயர்ந்த அளவில் இறக்கம் செய்யப்பட்ட ஆவணமாக காணப்பட்டது.

22. பின்வரும் சர்வதேச மநாடுகளில் உரை நிகழ்த்தப்பட்டது.

**கலாநிதி விதானகே, எம்.** 2012, டிசம்பர் மாதம் 5ம் திகதி கொரியாவில் சீயோல் என்னும் இடத்தில் இடம்பெற்ற அனர்த்த மதிப்பீட்டு மநாட்டில் உரை நிகழ்த்த.

**கலாநிதி விதானகே, எம்.** இலங்கையில் நீர் மாசுறுலை வேறுபட்ட இடங்களில் கண்கானித்தல். இது செப்டெம்பர் மாதம் 18-21 வரை சீனா டன்ஜநிம் என்னும் இடத்தில் விஞ்ஞானத்திற்கான 3ம் உலக கல்வியகத்தில் இடம்பெற்ற 12வது பொது மநாட்டில் உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டார்.

**கலாநிதி விதானகே, எம்.** 2012, செப்டெம்பர் மாதம் 14-16 வரை கைத்தொழில் தூய்மையான நீருக்கான உடனடித்தொழில்நுட்பங்கள் பற்றிய முதலாசது சர்வதேச மாநாடு இடம்பெற்றது.

23. **திருவதி ஆர். பி. வணிகதுங்க**
"TWAS இணையுரிமை மற்றும் TWAS இளம் விஞ்ஞானிகளின் கூட்டம்" இது மத்திய மற்றும் தென் ஆசியாவுக்கான TWAS பிராந்திய அலுவலகத்தினால் 2012 நவம்பர் 15-17ம் திகதி வரை இந்தியாவிலுள்ள உயர் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான நேரு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

24. **விஞ்ஞானப் பிரபல்யப்படுத்துகைப் அலகு** - 2013.01.10ம் திகதி அன்று மின் கல்வி மற்றும் கற்கை என்னும் வகுதியின்கீழ் சிறப்பு விருது வழங்கப்பட்டது. (மின்-சுவாபி மணி 2012)

## 10. விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துதல்

### 10.1 விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை அலகு

### குறிக்கோள்கள்

1. விஞ்ஞான சமூகத்திற்கான தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞானத் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படுதலுக்கு ஆதரவாக இருத்தல்.
2. விஞ்ஞானம் தொடர்பில் பொது மக்களின் புரிந்துணர்வை மேம்படுத்தலும் மற்றும் விஞ்ஞானம் பற்றிய வகையில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களின் ஊக்கத்தையும் மற்றும் ஆர்வத்தையும் மேம்படுத்தல்.

**அ.** விஞ்ஞான சமூகத்திற்கான தொழில்நுட்பவியல் மற்றும் விஞ்ஞானத் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படுதலுக்கு ஆதரவாக இருத்தல்.
(பயிற்சி பட்டறைகள், மாநாடுகள், பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள், விசேட விரிவுரைகள்)

### அ.1 பயிற்ச்சி பட்டறைகளும் மற்றும் மாநாடுகளும்

1) 2012.02.03 "ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த பேராசிரியர். டி.எம். காலபே என்பவரினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளை எவ்வாறு மேம்படுத்துதல்" எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறையானது ஆராய்ச்சி உதவியாளர்களுக்காக நடாத்தப்பட்டது. இதில் 22 பேர் பங்குபற்றினர்.

2) 2012.06.28 - 2012.06.09 ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சிவநாதன் ஆய்வுகூடங்கள் இலங்கையிலுள்ள தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியோருடன் கூட்டிணைந்து அடிப்படை கற்கைகள் நிறுவகத்தைச் சேர்ந்த பேராசிரிர். எம்.ஏ.கே.எல். திசாநாயக்க என்பவரினால் நடப்பு நிலை மற்றும் மென்பட சுருளின் போக்கு சூரிய பீ.வி தொழில்நுட்பம்" என்னும் தலைப்பில் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட சூரிய ஒளிமின்சார பயிற்சிப்பட்டறை (பல்கலைக்கழகங்ள், ஆராய்ச்சி நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் துறை அமைப்பான்மைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், எந்திரிகள், எம்.பில் மற்றும் பிச்.டி ஆராய்ச்சி மாணவர்கள் என 82 பேர் இந்த பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டனர்.

### அ.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

2012.09.12 "மின் நிறமாலைமாணி" எனும் தலைப்பில் அகபயிற்சிப்பட்டறை தொழில்நுட்ப ரீதியாக முக்கியத்துவம் பெற்ற விடயத்தில் பேராசிரியர் எம்.ஏ.கே.எல். திசாநாயக்க என்பவரால் ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு உள்ளக பயிற்சியானது வழங்கப்பட்டது.

### அ.3 விசேட விரிவுரைகள்

2012.01.04 "இலங்கையின் விஞ்ஞானமும் நாகரீகமும்" அவுஸ்திரேலியாவைச் சேர்நத் எந்திரி.டி. ஆறுமுகம்.

2012.02.01 "ஆராய்ச்சியை வர்த்தகமயப்படுத்தல் - உலகளாவிய அமைப்பில் மருத்துவ உபகரண கைத்தொழிற் துறையுடன் எனது அனுபவம்"

கலாநிதி ஷிராந்த்தா அப்புலி, VP ஒழுங்கு விதி விவகார தர நிர்ணயம் - கனடா.

2012.02.03 "ஆராய்ச்சி நடவடிக்கைகளை எவ்வாறு மேம்படுத்துதல்" பேராசிரியர் டி.எம். கோலவே, ஐக்கிய இராஜ்ஜிம்.

2012.02.15 **“VLLAST** நீர் பேணுகை, உங்களால் சவாலுக்கு முகம்கொடுக்க முடியுமா?” கலாநிதி நதிஷானி நானயக்கார, அடிப்படை கற்கைகள் நிறுவகம்.

2012.02.23 “அயனி திரவங்கள் மற்றும் அவற்றின் லீ உப்பு சேர்வையின் கட்டமைப்பு இயல்புகளின் தொடர்பிணைப்பு” திரு. ஜகத் பிலவல, தொழில்நுட்ப பல்கலைக்கழகம், சுவீடன்.

2012.02.29 **“Quarks and Leptons – Are they the Building blocks of nature?”** பேராசிரியர் எம்.எல். திசாநாயக்க அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்.

2012.03.21 “அமுக்கத்தின் கீழ் தாவரம்” கலாநிதி எம்.சி.எம் இக்பால், அடிப்படை கற்கைகள் நிறுவகம்.

2012.06.06 பாரிய அளவிலான தேசிய அனர்த்தங்ளுக்குப் பின்பு உளவியல் உதவியாளர்கள். பேராசிரியர் ஜியா நிக்கும் சேங் மற்றும் உளவியல் பேராசிரிர், உளவியல் நிறுவகம், சீனா.

2012.06.27 “கிமோ சிகிச்சையளிப்பு மற்றும் மரபனு வழங்களில் நனோ மருத்துவ பிரயோகங்களுக்கு அழிவுறத்தக்க பல்பகுதி சேர்வு நனோ துகள்கலை வடிவமைத்து விருத்தி செய்தல்”

செல்வி சந்தனி சமரஜீவ இரசாயனவியல் மற்றும் எந்திரவியல் டெக்சஸ் பல்கலைக்கழகம்.

2012.07.24 “வாசிப்பும் கலந்துரையாடலும்” திருவதி நமீதா கொக்கலே, இந்திய எழுத்தாளர் மற்றும் தோற்றுவிப்பாளர் - ஜெய்ப்போர் எழுத்தறிவு விழாவின் பணிப்பாளர் (அடிப்படை கற்கைகள் நிறுவகத்துடன் கூட்டினைந்து இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டது).

2012.07.27 “நட்சத்திரங்களைச் சுற்றி புவியைப் போன்ற ஏனைய கோள்களை இனங்கானல்”

போராசிரியர் துள்சி விக்ரமசிங்க பௌதீகவியல் திணைக்களம் பேராதெனிய பல்கலைக்கழகம்.

2012.07.25 “எமது அண்டம் எதனால் ஆக்கப்பட்டுள்ளது”
பேராசிரியர் ஏ. நானயக்கார, அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்.

2012.09.04 **“Measures against Elevated Ambient Rediation Dose after Fukushima Disaster”**
கலாநிதி டக்கேஷி லிமாட்டா, கதிரியல் விஞ்ஞானத்திற்கான தேசிய நிலையம், ஜப்பான்.

2012.12.17 **“Superconductivity: from fascinating physics to flying Trains”**
பேராசிரியர் எம்.ஏ.கே.எல் திசாநாயக்க, அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்.

## அ.4 ஆராய்ச்சி கூட்டங்கள்

**அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சி உதவியாளர்களால் ஆராய்ச்சி கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த கூட்டங்கள் ஆராய்ச்சி தேடல்களை முன்னளிப்பு செய்வதற்கும் ஆராய்ச்சி தொடர்பிலான பிரச்சனைகளை இணை குழுக்களுடன் கலந்துரையாடல் செய்வதற்கும் ஒரு தள மேடையை வழங்குகின்றது.**

| | |
|---|---|
| 2012.02.22 | "நோய்க்கான காரணம் அறியாத குரோனிக் சிறுநீரக நோயின் ஊடாக ரஜரட பிரதேசத்தில் குடிநீர் தர மதிப்பீடு"<br>திருவதி எச்.என் வாசனா, ஆராய்ச்சி உதவியாளர், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.03.13 | **"Removal of Aqueous Chromium by non living Cabombacaroliniana"**<br>திரு டி. சத்துரங்க, ஆராய்ச்சி உதவியாளர், அடிப்படை கற்கைகள் நிறுவகம். |
| 2012.05.16 | **"Chemistry and Bioactivities of seeds of *Pouteria Campechinana* (Lavulu) and associated Fungi"**<br>திருவதி ஜி. பத்மதிலக ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.05.22 | "தூக்கிச் செல்லத்தக்க சிங்கள உரையினை உரையாற்ற முறைமைக்கு வடிவமைத்தல்.<br>திருவதி எஸ்.எச்.டி.பி. விஜயதுங்க, ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.06.06 | **"Seasonal Variation of Water Quality and Plankton of Lake Gregory"**<br>திரு. எம். பி. யூ. பெரேரா, ஆராய்ச்சி உதவியாளர், அ. க. நி |
| 2012.06.13 | **Sno2** மற்றும் **Zno** நனோ கட்டமைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட சாயா உணர்த்திறன் கொண்ட சூரிய உயிர்க் கலங்கள்.<br>திரு. வி.எம்.கே.டி. விஜயரட்ண, ஆராய்ச்சி உதவியாளர், அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.08.22 | **"Single Bubble Sonoluminescence"**<br>திரு. எச்.எம்.பீ.எஸ் ஹேரத் ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.09.19 | 'புதிய உள இலக்குகளுக்கான மூளை நடவடிக்கைகளை பொது வெளி பாணிகளை பயன்படுத்தி ஆராய்தல்.<br>திரு எஸ்.எஸ். சஹமித், ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.10.10 | **"Genetic Variation of Genus *Dendrobium* (Orchidaceae) in Sri Lanka"**<br>திரு. பி. எம். எச். சந்தமல், ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.10.17 | "விஞ்ஞான ஆராய்ச்சியில் திறள் கணக்கீடு"<br>திரு. ஐ.எஸ்.கருணாவன்ச, ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |

| | |
|---|---|
| 2012.10.31 | "கௌபியை உட்கூறாகக்கொண்ட சோதனை உணவு எலிகளில் சீரம் இலிப்பிட்டினைக் குறைக்கும்"<br>திரு. ஓ.எஸ். பெரேரா. ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |
| 2012.11.14 | **"Mechanisms Study: Anodic Oxidation of Phenol in Contaminated Water on Dimensionally Stable Anode"**<br>திரு பி. ஜயதிலக்க, ஆராய்ச்சி உதவியாளர் அடிப்படைக் கற்கைகள் நிறுவகம். |

## ஆ. விஞ்ஞானம் தொடர்பில் பொதுமக்களின் புரிந்துணர்வை மேம்படுத்துதல்

**ஆ.1** 2012 செப்டெம்பர் மாதம் 21-23ம் திகதி வரை கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கண்ணங்கர அவர்களின் 43வது நினைவு தினத்தை முன்னிட்டு கொத்மலையில் உள்ள ஹதுனவேவா மத்திய கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி

**ஆ.2** கல்விசார் விரிவுரை - நாத்தாண்டியாவிலுள்ள தர்மசேனா மத்திய மகா வித்தியாலயத்திலிருந்தான நானூரு மாணவர்களுக்காக நனோ தொழில்நுட்பம் தொடர்பில் 2012.01.10ஆம் திகதி அன்று இவ்விரிவுரை ஆற்றப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு விஞ்ஞான கதிர்கள் கருத்திட்டத்தினால் (விதுகிரண) நிதியீடு செய்யப்பட்டது.

### ஆ.3 பயிற்சிப்பட்டறைகள்

1. 2012.02.23, 2012.03.06, 2012.03.15 மற்றும் 2012.04.05 ஆகிய திகதிகளில் விஸ்தரிப்பு அலுவலர்கள் மற்றும் கமக்காரர்கள் ஆகியோருக்கு "இலங்கையில் மேம்படுத்தப்பட்ட பொருளாதாரம் சுற்றாடலுக்கான நுண் உயிரியியல் உயிர் பசளையின் பயனுறுதிமிகு பாவனை" எனும் தலைப்பில் நான்கு பயிற்சிப்பட்டறைகள் இடம்பெற்றன. இதில் 70 பேர் பங்குபற்றினர்.

2. 2012.08.23 இல் "குருஷி சேவா பியச" வினைச் சார்ந்த முகாமையாளர்களுக்காக "இலங்கையில் மேம்படுத்தப்பட்ட பொருளாதாரம் சுற்றாடலுக்கான நுண் உயிரியியல் உயிர் பசளையின் பயனுறுதிமிகு பாவனை" எனும் தலைப்பில் பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.
   இந்த பயிற்சிப்பட்டறைக்கான இணை ஒழுங்கமைப்பாளர்கள் பேராசிரியர் எஸ்.ஏ. குலசூரிய மற்றும் பேராசிரியர் காமினி செனவிரட்ண.

3. "நனோ விஞ்ஞானம் மற்றும் நனோ தொழில்நுட்பம்" என்னும் தலைப்பில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை.

| | |
|---|---|
| 2012.05.04 | ஆசிரியர்களுக்காக "நனோ விஞ்ஞானம்" என்னும் தலைப்பில் இடம்பெற்ற பயிற்சிப்பட்டறையில் கொத்மலை கல்வி வலையத்தைச் சேர்ந்த முப்பது பேர் பங்கு பற்றினர். |
| 2012.05.30 | மாதம்பேயில் உள்ள ஹலாவத மத்திய வித்தியாலயத்தைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்கள் என 200 பேர் பங்குபற்றினர். |
| 2012.06.21 | பதவிபுர பதவிபராக்கிரம வித்தியாலயம், அழி வங்குவ மகா வித்தியாலயம் மற்றும் மித்திரி வித்தியாலயம் ஆகிய பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த 6 தொடங்கி 11ம் வகுப்பு மாணவர்கள் 300 பேர் பங்கு பற்றினர். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விஞ்ஞான பிரபல்யப்படுத்துகை அலகினால் விஞ்ஞான கருவிக்கலத்தொகுதி வழங்கப்பட்டது. இதற்கான நிதியீடு விஞ்ஞான கதிர்கள் கருத்திட்டமாகும். |

| | |
|---|---|
| 2012.07.06 | மதுரங்குளிய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு மாணவர்களின் 150 பேர் பங்குபற்றினர். இப்பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விஞ்ஞான கருவிக்கலத்தொகுதி வழங்கப்பட்டது. இதற்கான நிதியீடு விஞ்ஞான கதிர்கள் கருத்திட்டமாகும். |
| 2012.09.11 மற்றும் 2012.09.13 | பரமதுல்ல மத்திய கல்லூரியினை சார்ந்த 9ம் தர மாணவர்களுக்கு விஞ்ஞான கருவி கலத் தொகுதி அன்பளிப்பு |
| 2012.10.02 | வீரபராக்ரம மத்தியகல்லூரியைச் சேர்ந்த 120 மாணவர்கள். |
| 2012.11.12 | 62 கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கு விஞ்ஞான கருவிக்கலத்தொகுதி அன்பளிப்பு |
| 2012.10.04 | கொத்மலை கல்வி வலையத்தைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவர்கள் 150 பேர் பங்கு பற்றினர். மாணவர்களுக்கு விஞ்ஞான கருவிக்கலத்தொகுதி வழங்கப்பட்டது. இதற்கான நிதியீடு விஞ்ஞான கதிர்கள் கருத்திட்டமாகும். |

**2012ம் ஆண்டில் இடம்பெற்ற 39வது பள்ளிக்கூட விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டம்**
**(SSP)**
**2012 டிசம்பர் 18-21**

| உயிர் எரிபொருள் | 258,483.27 | 15,289.59 | 39,909.00 | 13,107.50 | 53,000.00 | 5,421.00 | | 3,500.00 | |
| புவிவெப்ப வள வரைபடம் | 33,546.61 | 14,844. 71 | 6,526.80 | 1,772.75 | 112,900.00 | 7,750.41 | 78,775.75 | 38,675.00 | 3,174,248.78 |
| இரசாயன சூழலியல் | 329,253.42 | 61,109.54 | 19,960.00 | 8,41 1.71 | 15,210.00 | 6,449.35 | 20,754.00 | 3,600.00 | 2,765,182.20 |
| மின்னணு இரசாயன திலியம் | 178,327.12 | 19,771.08 | 49,337.14 | 264,706.92 | - | 6,734.79 | 7,089.00 | 400.00 | 1,468,886.87 |
| உணவு விஞ்ஞானம் இயற்கை | 337,962.80 | 193,685.99 | 14.00 | 12,389.92 | - | 3,794.79 | 6,343.50 | 1,424.00 | 2,264,879.59 |
| நிர்வாகம் | 813.25 | 32,559.00 | 1,685,586.33 | 4,819.50 | - | 366,704.92 | 456,216.75 | 102,270.00 | 24,919,822.00 |
| மொத்தம் | **3,755,619.09** | **3,166,116.55** | **2,767,963.82** | **485,091.06** | **269,291.38** | **487,490.44** | **919,349.00** | **245,139.00** | **68,413,090.16** |

**2012/12/31 இல் உள்ளவான கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறுகைகள் தொடர்பில் பகுப்பாய்வு**

**முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறுகைகள் ரூபாய் 95,668.50**

| | 0-12 மாதாங்கள் ரூபா | 1-2 வருடங்கள் ரூபா | 2-3 வருடங்கள் ரூபா | 3-4 வருடங்கள் ரூபா | 4-5 வருடங்கள் ரூபா | 05 வருடங்கள் அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| ருவினி லியனகே | 2,000.00 | - | - | - | - | - |
| கெ.ஜ.கெ.சமர கோன் | 20,000.00 | - | - | - | - | - |
| டி.எச்.என்.ஜி. அமரவீர | 1,105.00 | - | - | - | - | - |
| அ.க.நி.ஊ.சே.நி. 1% | 27,157.18 | - | - | - | - | - |
| ஜ. தம்பலே | 14,978.94 | - | - | - | - | - |
| ஜ.தயாரட்ன | 4,590.00 | - | - | - | - | - |
| தே.வி.மன்றம் | 25,837.38 | - | - | - | - | - |
| | **95,668.50** | - | - | - | - | - |

**பண்டிகை முற்பணங்கள் ரூபாய் 51,500.00**

| 0-12 மாதாங்கள் ரூபா | 1-2 வருடங்கள் ரூபா | 2-3 வருடங்கள் ரூபா | 3-4 வருடங்கள் ரூபா | 4-5 வருடங்கள் ரூபா | 05 வருடங்கள் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 50,000.00 | - | 1,500.00 | - | - | - |
| **50,000.00** | **-** | **1,500.00** | - | - | - |

**2012/12/31 இல் உள்ளவான கடன் கொடுத்தோர், விநியோகத்தர் மற்றும் சேவைகள் பற்றிய களுப்பாய்வு**

| | 0-12 மாதாங்கள் ரூபா | 1-2 வருடங்கள் ரூபா | 2-3 வருடங்கள் ரூபா | 3-4 வருடங்கள் ரூபா | 4-5 வருடங்கள் ரூபா | 05 வருடங்கள் அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| கண்டி டயர் கம்பனி | 81,517.47 | - | - | - | - | - |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | 10,069.96 | - | - | - | - | - |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | 15,025.07 | - | - | - | - | - |
| டி.காமினி | 36,100.00 | - | - | - | - | - |
| திரு.நுகவியாடா | 49,900.00 | - | - | - | - | - |
| டி.பி.நிமாவாசிரி | 1,000.00 | - | - | - | - | - |
| சிலின்டெக் | 24,000.00 | - | - | - | - | - |
| எக்ெசாடெஷ வெப்டெக் | 3,920.00 | - | - | - | - | - |
| வரை.சென்றால் ஏஜென்சீஸ் | 9,856.00 | - | - | - | - | - |
| வரை.இந்தியா மோட்டர்ஸ் | 4,995.00 | - | - | - | - | - |
| வரை.பகுப்பாய்வு கருவிகள் நிறுவகம் | 28,777.25 | - | - | - | - | - |
| த இன்டர்நெஷனல | 7,895.00 | - | - | - | - | - |
| எட்லஸ் | 2,920.00 | - | - | - | - | - |
| | **275,975.75** | - | - | - | - | - |

**2012/12/31 இல் உள்ளவான கடன்பட்டோர் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றிய மிகுதிகள் - ரூபாய் 197,729/65**

| 0-12 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 05 |
|---|---|---|---|---|---|

| | மாதாங்கள் ரூபா | வருடங்கள் ரூபா | வருடங்கள் ரூபா | வருடங்கள் ரூபா | வருடங்கள் ரூபா | வருடங்கள் அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| ஊ.சே.நிதி. கொடுக்க வேண்டியது | - | - | - | - | - | 540.53 |
| ஊ.ந.பொறுப்புநிதி கொடுக்க வேண்டியது | - | - | - | - | - | 73.72 |
| மறித்து வைத்தல் பணம் கொடுக்க வேண்டியது | 61,545.68 | - | - | - | - | - |
| தே.ஆ. மன்ற வாடகை (மீகளிக்கத்தக்க வைப்பு) | - | - | - | - | - | 90,000.00 |
| அப்புறப்படுத்தத்தக்க (மீகளிக்கத்தக்க வைப்பு) | - | - | - | 3,220.00 | - | 250.00 |
| உள்நாட்டு இறைவரி (முத்திரை/வரி) | 130.90 | - | - | - | - | - |
| மல்வத்த ஒப்பந்த காரர்கள் | - | - | - | - | 27,000.00 | - |
| தூனார் விஞ்ஞானம் | - | - | 14,968.82 | - | - | - |
| | **61,676.58** | **-** | **14,968.82** | **3,220.00** | **27,000.00** | **90,864.25** |

| | 0-12 மாதாங்கள் ரூபா | 1-2 வருடங்கள் ரூபா | 2-3 வருடங்கள் ரூபா | 3-4 வருடங்கள் ரூபா | 4-5 வருடங்கள் ரூபா | 0-12 மாதாங்கள் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| பிரயாணம் | 800.00 | - | - | - | - | - |
| அரச கணக்காய்வு கட்டணம் | 130,000.00 | - | 360,000.00 | - | - | - |
| தற்காலக பதவியணி சம்பளம் | 52,335.00 | - | - | - | - | - |
| தொடர்பாடல் | 46,235.03 | - | - | - | - | - |
| மேலதிக நேரம் | 63,808.92 | - | - | - | - | - |
| பாதுகாப்பு சேவைகள் | 163,544.64 | - | - | - | - | - |
| நலன்புறி | 78,899.00 | - | - | - | - | - |
| பொது மேம்படுத்துகை - வாயிற் காவலர் | 54,320.00 | - | - | - | - | - |
| பொது மேம்படுத்துகை – தோட்டம் | 31,124.80 | - | - | - | - | - |
| பொது மேம்படுத்துகை உணவு | 25,000.00 | - | - | - | - | - |
| நீர்க்கட்டணம் | 42,454.89 | - | - | - | - | - |
| இணையம் | 110,189.08 | - | - | - | - | - |
| சம்பளம் எச். ஜயசேகர | - | - | - | - | 2,456.89 | - |
| வருகை சம்பளம் - பேரா.எஸ்.எ.குலசூரிய | 44,199.03 | - | - | - | - | - |
| மின்சாரம் | 244,629.19 | - | - | - | - | - |
| பத்திகை கட்டணம் | 1,520.00 | - | - | - | - | - |
| நானாவிதம் | 8,240.16 | - | - | - | - | - |
| வருகை சம்பளம் - திரு.பத்மசிரி | 8,853.39 | - | - | - | - | - |
| நூலக புத்தகம் | 3,240.00 | - | - | - | - | - |
| சஞ்சிகைகள் | 15,660.05 | - | - | - | - | - |
| | **1,125,053.18** | **-** | **360,000.00** | **-** | **2,456.89** | **-** |

**2012.12.31 இல் உள்ளவாறான IAL மிகுதிகள்**

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| F/A/1 | குளிரூட்டி | 4,569,716.61 | |
| F/A/2 | கட்டிடம் | 29,728,586.91 | |
| F/A/3 | கணணியும் அச்சுப்பெறியும் | 16,205,410.47 | |
| F/A/4 | தொடர்பாடல் கருவிகள் | 843,995.42 | |
| F/A/5 | தளபாடமும் பொருத்துகளும் | 3,132,442.24 | |
| F/A/6 | கட்டிடத்திற்கு மேம்படுத்துகைகள் | - | |
| F/A/7 | நிலம் | 28,622,151.00 | |
| F/A/8 | ஆய்வு கூட உபகரணம் | 159,862,672.57 | |
| F/A/9 | நூலக புத்தகங்கள் | 12,177,572.15 | |
| F/A/10 | மோட்டார் வாகனம் | 20,268,108.55 | |
| F/A/11 | இயந்திர கருவிகள் | 754,039.28 | |
| F/A/12 | அலுவலக நானாவீத கருவிகள் | 10,307,951.90 | |
| F/A/13 | மிகு குளிரூட்டி | 1,145,555.38 | |
| F/A/14 | விளையாட்டு உபகரணங்கள் | 13,480.00 | |
| F/A/15 | மோட்டார் வாகனங்கள் | - | |
| F/A/16 | சமையறை உபகரணங்கள் | - | |
| F/A/17 | பயிற்சிசெற்றிறன் | 815,697.40 | |
| o/A/1 | ஊ.சே.நிதி முதலீடு | 36,810,789.43 | |
| o/A/2 | அகற்றப்பட்ட நலையான சொத்து | 26,624,390.84 | |
| o/A/3 | மாதிரி நிலம் | 37,500.00 | |
| o/A/4 | நுகர்வுக்கடனில் முதலீடு | 151,775.31 | |
| C/A/1 | கட்டிட மேம்படுத்தகை இருப்பு | 271,785.09 | |
| C/A/2 | ஆய்வு கூட கண்ணாடி குடுவைகள் | 1,629,040.54 | |
| C/A/3 | இருப்பு - | 17,405.84 | |
| C/A/4 | இருப்பு – காகிதாயிகள் | 190,563.85 | |
| C/A/5 | சில்லறை இருப்பு | 119,582.83 | |
| C/A/6 | இருப்பு – பிரசுரிப்புகள் | 262,806.96 | |
| C/A/10 | பெறப்பட வேண்டிய காப்புறுதி பணம் | - | |
| C/A/11 | விநியோகத்தருக்கு முற்பணம் | 22,000.00 | |
| C/A/12 | முற்பணமாக வெளிநாட்டுகொடுப்பனவு | 447,734.78 | |
| C/A/13 | நாணயகழக எல்லை | - | |
| C/A/14 | பண்புகை முற்பணம் | 51,500.00 | |
| C/A/15 | விசேட முற்பணம் | - | |
| C/A/16 | சம்பள முற்பணம் | - | |
| C/A/18 | மீள்ளிக்கத்தக்க வைப்புகள் | 414,100.00 | |
| C/A/19 | முற்பண கொடுப்பனவு | 853,230.26 | |
| C/A/20 | பெறப்பட வேண்டியனைய க/கு | 157,671.46 | |
| C/A/21 | நிலை.வைப்.பெற.வட்டி | 2,767,316.76 | |
| C/A/22 | தே.ஆ.மன். கட்டிடவைப்பு | - | 90,000.00 |
| C/A/23 | அப்புறப்படுத்தத்தக்க உருப்புகள் பற்றிய மீளளிப்பு வைப்பு | - | 3,470.00 |
| C/A/24 | மீளளிக்கத்தக்க வாங்கு வைப்புகள் | - | |
| C/A/26 | தூனர் விஞ்ஞானம் | - | 14,968.82 |
| C/A/36 | நீருக்குரிய ஜெக் | 4,000.00 | |
| C/A/37 | கலாநிதி. பண்டாரவின் மேசை | - | |

| | | | |
|---|---|---|---|
| C/A/38 | புத்தக  ராக்கை | 5,489.50 | |
| C/A/39 | புவி சரிதவியதாங்கி. | 4,960.00 | |
| C/A/40 | பண்டிகை முற்பண முதலீட்டு க/கு | 250,000.00 | |
| C/A/41 | பணிப்பாளர் கட்டிட தணைக்களம் | 1,782,831.13 | |
| C/A/42 | வரைபடம் | 1,097,477.65 | |
| C/A/45 | புதிய விஞ்ஞான கட்டிடம் | 32,920,000.00 | |
| C/A/46 | மிகு குளிரூட்டி | | |
| L/1 | நிலவைச்  செலவினம் | | 1,487,510.07 |
| L/2 | கடன் கொடுத்தோர் | | 275,975.75 |
| L/3 | செலவிடப்பட்ட மூலதன நிதியம் | | 162,820,057.34 |
| L/4 | செலவிடப்படாத மூலதன நிதியம் | | 710,969.66 |
| L/5 | ஊ.சே.நி. கொடுக்க வேண்டிய | | 540.53 |
| L/6 | ஊ.ந. பொறுப்பு நிதி கொடுக்க வேண்டிய | | 73.72 |
| L/8 | அ.க.நி.சேமலாப நிதி | | 42,920,908.73 |
| L/10 | நிறுவக நிதியம் | 42,122,612.56 | - |
| L/11 | மீளளிப்புக்குரிய மேலதிக செலவீடு – மானியம் | | - |
| L/12 | பணிக்கொடை ஒதுக்கீடு | | 14,141,405.00 |
| L/13 | பே.தேய்வு ஒதுக்கீடு | | 73,946,010.28 |
| L/14 | செலவிப்பட்ட ஜனாதிபதி நிதிய மூலதனம் | | 7,078,501.15 |
| L/15 | கொடுக்க வேண்டிய வாடகை | | - |
| L/19 | கொடுக்க வேண்டிய எனைய க/கு | | 25 |
| L/20 | கொடுக்க வேண்டிய மறித்துவைத்த பணம் | | 61,545.68 |
| L/21 | ஓய்வு பெற்ற உறுப்பினர் நிதிய க/கு | | 1,908,712.17 |
| L/22 | மூலதன செலவின நிதியம் | | 1,245,227.00 |
| L/23 | பள்ளிக் கூட விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டம் | | 80,824.00 |
| L/24 | டிஜிட்டில் PABX | | - |
| L/25 | கட்டிட ஒப்பந்தக் கார்ர்கள் | | 27,000.00 |
| L/26 | பண்டகை முற்பண நிதியம் | | 250,000.00 |
| L/28 | நகர்வு நிதியம் | | 151,775.31 |
| L/36 | குறித்துரைக்கப்பட்ட ஆராய்ச்சி மானிய நிதியம் | | 1,224,721.02 |
| L/38 | EEB நீர்ப்பகுப்பாய்வு | | 5,995.00 |
| L/42 | BES மானியம் | | 62,412.22 |
| L/44 | அரச வரி | | 105.9 |
| L/45 | உள் நாட்டு இறைவரி  திணைக்களம் | | - |
| L/46 | RG/2006/AASR/04 கலாநிதி காமினி | | 54,505.83 |
| L/48 | RG/2006/EB/08 | | 35,522.39 |
| L/53 | பயிற்சிப்பட்டறை | | - |
| L/55 | உயிர் மதிப்பீடுகள் | | 49,442.83 |
| L/56 | விஞ்ஞான சஞ்சிகை | | 230,005.75 |
| L/57 | கூட்டிணைவு | | 12,634.26 |
| L/58 | சய்ட்மா பல்கலைக்கழகம் | | 357,828.74 |
| L/60 | என்.டபிள்யு.எஸ்.டி.பி. | | - |
| L/61 | கலாநிதி.விதான | | 1,082.07 |
| L/62 | நீர்தரம் | | - |
| L/65 | விதுகிரன | | 335,185.44 |

| | | | |
|---|---|---|---|
| L/66 | வருடாந்த மீளாய்வு | - | |
| L/67 | நாவல திறந்த பல்லைக்கழகம் | | 31,777.95 |
| L/68 | இலங்கை திந்த பல் லைக்கழகம் | | 61,020.00 |
| L/69 | களணி பல்கலைக்கழகம் | | 45,000.00 |
| L/70 | சோலா ஆசியா | | 310,912.75 |
| L/71 | விதாதா | - | |
| L/72 | கருத்தரங்கு | | 596,280.07 |
| L/73 | சிட்னி பல்லைக்கழகம் | | 1,233,182.85 |
| L/74 | RG/2011/EQ/01 | - | |
| L/75 | சி.கெ.டி. | | 146,159.34 |
| L/76 | RG/2011/BS/01 கலாநிதி, நதீசானி | | 118,332.73 |
| L/78 | HETC கருத்திட்டம் | | 239,781.75 |
| L/80 | விஞ்ஞான தொழிநுட்ப  அமைச்சு | - | |
| L/79 | அநுராதரபுர மாவட்ட தாங்கி | | 2,400,000.00 |
| L/81 | RG/2011/AG/01 | | 161,986.82 |
| L/82 | IWS சுவீடன | | 426,437.50 |
| L/83 | உணவு | | 277,745.60 |
| L/84 | RG/2012/AG/01 | | 630,447.33 |
| L/85 | மஹாவலி நீர்ப்பாசனம் | | 83,022.00 |
| L/86 | PV  பயிற்சிப்பட்றை | | 42,431.78 |
| L/87 | RG/2012/EQ/03 | | 576,224.00 |
| L/88 | RG/2012/SpR/02 | | |
| L/89 | RG/2012/BS/06 | | 280,462.57 |
| L/90 | மாஸ்டர் வகுப்புகள் | | 482,540.26 |
| L/91 | NSF/SCH/2012/02 | | 300,000.00 |
| L/92 | RG/2012/NRB/03 | | 316,438.00 |
| L/93 | RG/2012/BS/04 | | 535,000.00 |
| L/94 | நீர்த்தரம் | | 7,200.00 |
| L/95 | டோக்கியோ சீமேந்து | | 11,979.00 |
| L/96 | மீள்பெறுமான ஒதுக்கீடு | | 122,463,619.32 |
| I/1 | வெளிநாட்டு நாணய பரிமாற்றின் மூலம் கிடைக்கப் பெற்றுது | | 121,290.42 |
| I/2 | அரச மானியம் – நடப்பு | | 104,000,000.00 |
| I/3 | அரசமானியம் மூலதனம் செலவிடப்பட்டது ரூபா 50,141,481.79 செலவிடப்படாதது ரூபாய் 5,743,353.58 | | 55,884,835.37 |
| I/4 | தல்கல் வருமானம் | | |
| I/5 | கேட்போர் கூடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் | | 552,531.11 |
| I/6 | பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி | | 177,349.77 |
| I/7 | புத்தக விற்பனை | | 13,171.56 |
| I/8 | சில்லறை வரமானம் | | 183,717.18 |
| I/10 | நன்கொடை | | 268,487.95 |
| I/13 | அப்புறப்படுத்தக்கலைகள் விற்பனை | 147,086.11 | |
| I/16 | உள்ளூர் மற்றும் வெளியூர் மானிய நிதிய வருமானம் | - | 16,550,542.25 |

| | | | |
|---|---|---|---|
| I/17 | தே.ஆ.ம வாடகை | | 120,000.00 |
| I/18 | வாகன விற்பனை | | |
| E/1 | விளம்பரம் | 323,120.00 | |
| E/2 | கணக்காய்வு கட்டணம் | 130,000.00 | |
| E/3 | கேட்போர் கூடம் மற்றும் அறை பேணுகை | 170,896.50 | |
| E/4 | கட்டிட காப்புறுதி | 344,057.16 | |
| E/5 | வங்கி கட்டணம் | 38,369.42 | |
| E/6 | தொலை தொடர்பாடல் | 688,841.20 | |
| E/7 | தளை அகற்றல் | 3,189.75 | |
| E/8 | பாதுகாப்பு வரி | | |
| E/9 | தம்புள்ளை விருட்சம் | 200,000.00 | |
| E/10 | மின்சாரம் | 6,083,593.03 | |
| E/11 | எரிபொருள் | 1,797,095.15 | |
| E/12 | பொது மேம்படுத்துகைகள்- வாயிற் காவலர் | 651,840.00 | |
| E/13 | பொது மேம்படுத்துகைகள்- தோட்டம் | 368,103.12 | |
| E/14 | பொது மேம்படுத்துகைகள்- உணவு | 300,000.00 | |
| E/15 | பணிக் கொடை | 1,016,587.50 | |
| E/16 | மோட்டார் வாகன பேணுகை | 875,011.28 | |
| E/17 | மோட்டார் வாகன காப்புறுதி | 312,187.67 | |
| E/18 | மோட்டார் வாகன உத்தரவுபத்திரம் | 51,980.62 | |
| E/19 | கட்டி பேணுகை | 485,091.06 | |
| E/20 | கருவி பேணுகை | 1,967,963.82 | |
| E/21 | மேலதிக நேரம் | 850,049.54 | |
| E/22 | தபால் | 104,363.00 | |
| E/23 | முன்னைய வருடசீராக்கங்கள் | 56,516.24 | |
| E/24 | ஆராய்ச்சி மன்ற கூட்ட செலவினம் | 17,949.00 | |
| E/25 | பாதுகாப்பு | 1,962,535.68 | |
| E/26 | பதவியணி போக்குவரத்து | 1,071,259.00 | |
| E/28 | சந்தாப்பணம் சஞ்சிகைகள் | 235,930.47 | |
| E/29 | உறுப்புரிமை கட்டணம் | 723,970.01 | |
| E/30 | பதவியனி காப்புறுதி | 408,898.89 | |
| E/31 | பிரயாணம் சந்தாப்பணம் | 245,139.00 | |
| E/32 | நலன்புரி | 1,005,223.00 | |
| E/33 | நீர் | 922,731.27 | |
| E/34 | சம்பளம் | 59,762,565.99 | |
| E/35 | ஊ.சே.நிதி 15% | 7,208,770.14 | |
| E/36 | ஊ.ந.பொ. நிதி 3% | 1,441,754.03 | |
| E/37 | பாவிக்கப்பட்ட காகிதாயிகள் | 487,490.44 | |
| E/38 | ஆய்வு கூட கண்ணாடி பண்டங்கள் | 3,755,619.09 | |
| E/39 | நுகர்வு | 3,166,116.55 | |
| E/40 | அச்சிடல் | 45,923.50 | |
| E/41 | சட்ட செலவினம் | | |
| E/43 | கேரிக்கை | 5,250.00 | |

| | | | |
|---|---|---|---|
| E/45 | பெ.தேய்வு | 26,784,232.30 | |
| E/47 | தற்காலிக பதவியணி படி | 930,187.93 | |
| E/49 | நானாவிதம் | 646,281.02 | |
| E/50 | இணையம் | 1,419,416.94 | |
| E/53 | வெ ளியூர், உள்ளூர் மானிய செலவினம் | 16,550,542.25 | |
| E/54 | பிரசுரிப்பு நன்கொடை | 7,300.60 | |
| E/56 | பிரயாணம் - வெளியூர் | 269,291.38 | |
| E/57 | அறைச்செலவினம் | | |
| E/58 | கலாநிதி.எஸ்.சுபிசிங்க | | |
| O/C/B/1 | தே.சே.வங்கி க/கு 1-0015 - 01 - 02989 | 3,067,993.66 | |
| O/C/B/2 | ஆரா.நிதியம் தே.சே.வ - 1-0015 - 01 - 03152 | 57,769.71 | |
| O/C/B/3 | சில்லறை காசு கட்டுப்பாடு க/கு | | |
| O/C/B/4 | சில்லறைகாசு அக்கறைத் தொகை | 6,000.00 | |
| O/C/B/5 | முத்திரை அக்கறைத் தொகை | 500 | |
| O/C/B/6 | சேமலாபநிதி நடப்பு க/கு இ.வங்கி 32 794 | 2,174,130.36 | |
| O/C/B/8 | கொழும்பு அலுவளகம் | | |
| | தே.சே.வங்கி 100151091808 | 151,775.31 | |
| O/C/B/11 | பதவியணி நகர்வுக் கடன் | 3,817,263.00 | |
| | இ.வங்கி 32779 | 6,960,738.40 | |
| | இ.வங்கி 32795 | 14,106,684.56 | |
| | காசு | | |
| | SFAc/KN/USD/01 | 5,387,728.57 | |
| | | **619,234,848.89** | **619,234,848.89** |

சீஎல் /கேடி/ஜே/சீ 2014 மார்ச் 21

ஐஎப்எஸ்/2013/20

பணிப்பாளர்,

இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகம்.

**இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுடனும் 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டத்தின் 36(4) ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் கீழ் விபரமான அறிக்கையொன்று 2013 செப்தெம்பர் 25 ஆம் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறைக் கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளின் பிரகாரம் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அவற்றின் கொள்வனவு திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,287,793 கூட்டுத்தொகையான ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்காக ரூபா 1,084,985 ஆன பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசின் மானியங்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 212,961,539 பெறுமதியான ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்காக சிறந்த கணக்கீட்டு நடைமுறைகளின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசின் மானியங்களாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 15,200,000 பெறுமதியான இரண்டு வாகனங்கள் வாகனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மானியங்கள் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக நிறுவகத்தின் நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமான ஆய்வுகூட உபகரணங்கள், மற்றும் தளபாடங்கள் உள்ளடங்களாக 08 சொத்து விடயங்களை ஆண்டின் போது அகற்றும் நோக்கில் நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கிலிருந்தும் முறையே ரூபா 29,893,202 தொகை ரூபா 3,268,811 தொகை என்பன சொத்துக்கள் அகற்றும் கணக்கிற்கு மாற்றப்பட்டு அதன் தேறிய வேறுபாடான ரூபா 26,624,391 இனை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வுபகரணங்கள் கணக்காய்வுப் பரிசீலனைச் சந்தர்ப்பமான 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மூலம் ரைசோபியம் செயற்திட்டத்தின் கீழ் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 784,470 பெறுமதியான 02 உபகரண விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட (Solar Asia) கருத்தரங்கிற்காகவும் விவசாய சுகாதாரத்திற்காக இயற்கை உற்பத்திகளை ஈடுபடுத்துவது தொடர்பான ‘‘சர்வதேச கருத்தரங்கிற்கு’’ உரிய முறையே 10 சதவீதமான நிர்வாக செலவினமான ரூபா 171,972 உம் ரூபா 449,944 உம் முன்னைய ஆண்டின் போதான சீராக்கற் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக முறையற்ற விதத்தில் ஆராய்ச்சி நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2011 இன் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 08 நீர் சுத்திகரிப்பு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய நிர்வாகக் கட்டணமான ரூபா 496,000 இற்குப் பதிலாக ரூபா 456,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 40,000 ஆன வருமானம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்னவு செய்யப்பட்ட ரூபா 149,363 பெறுமதியான பென்ரி கபட் உருப்படிகள், தளபாடங்கள் மற்றும் உபகரணக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக கேட்போர் கூடம் மற்றும் அறைப் பராமரிப்பு செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் குறைவாகவும் தளபாடங்கள் மற்றும் கேட்போர் கூடம் மற்றும் அறைப் பராமரிப்பு செலவினம் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஜெய்கா செயற்திட்டத்திலிருந்து மானியமாக நிறுவகத்தின் உபகரணங்கள் பராமரிப்பு பிரிவிற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,947,500 பெறுமதியான உதிரிப்பாகங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இணக்கம் செய்யப்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்கின் பிரகாரமான மீதிகளுக்கும் உப பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளுக்குமிடையே ரூபா 211,293,252 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**2.2.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 138,509 ஆன செலுத்த வேண்டிய 07 கணக்கு மீதிகள் இருந்ததுடன், அம்மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 14,985,603 பெறுமதியான 05 கணக்கு உருப்படிகளுக்குரிய கீழே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கின் பெயர் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| இலங்கை வங்கி 1 | 1,102,328 | மீதி உருவான முறை |
| இலங்கை வங்கி 2 | 2,414,237 | மேற்படி |
| இலங்கை வங்கி 3 | 28,617 | மேற்படி |
| இலங்கை வங்கி 4 | 8,171,609 | மேற்படி |
| நிலையான சொத்துக்கள் கைதவிர்ப்புக் கணக்கு | 3,268,812 | கைதவிர்ப்பு செய்யப்பட்ட சொத்துகளுக்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு உருவான முறை |
| கூட்டுத்தொகை | 14,985,603 | |

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கணனிகள் மற்றும் அதற்குரிய உதிரிப் பாகங்கள் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,186,110 பெறுமதியுடைய கணனிகள் மற்றும் உதிரிப் பாகங்கள் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 110 | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| நிதிப் பிரமாணம் 371 | (i) குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதி உரிய செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,332,784 ஆன 13 முற்பண மீதிகள் 2013 மார்ச் மாதம் வரையில் தீர்க்கப்பட்டிருக்க வில்லை |

(ii) துணைக் கட்டுநிதியாக ரூபா 20,000 இற்கு மேற்படாத முற்பணத்தை வழங்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 17 சந்தர்ப்பங்களில் அந்த எல்லையை மிகைத்து ரூபா 107,536 ஆன முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) CCD முருங்காய் செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத தற்காலிக வெளிக்கள உதவியாளர் ஒருவருக்காக 2011 ஆண்டிற்காக ரூபா 60,000 தொகையும் 2012 சனவரி முதல் மே மாதம் வரை ரூபா 50,000 தொகையும் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 290,216 கூட்டுத்தொகையான முற்பணத்தொகையொன்று தீர்க்கப்படாமல் ஆராய்ச்சி நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொள்வதற்கு முன்னர் ரூபா 127,993,524 பற்றாக்குறையாக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 104,000,000 ஆன அரசாங்க மானியத்தினை கணக்கில் எடுத்துக் கொண்டதன் பின்னர் பற்றாக்குறை ரூபா 23,993,524 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முன்னர் பற்றாக்குறை ரூபா 107,979,876 ஆக இருந்ததுடன், மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 93,407,000 தொகையான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்ததன் பின்னர் அது ரூபா 14,572,876 ஆன பற்றாக்குறையாக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைத் கருத்திற் கொண்டதன் பின்னர் நிதி விளைவுகளில் ரூபா 9,420,648 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ்வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 18,849,944 ஆல் அதிகரித்தமை விசேடமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயலாற்றல்

1981 இன் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படை கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டத்தின் 4(ஊ) பிரிவிற்கு முரணாக அடிப்படை மற்றும் எதிர்கால கற்கை நடவடிக்கைகளுக்காக தாபிக்கப்பட்ட ஆராய்ச்சி நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சிகளுக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத செயற்பாடுகளுக்காக ரூபா 1,190,788 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செலவினத்தில் ஆராய்ச்சியாளரினால் வெளியிடப்பட்ட புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்ட செலவினத்தை சீராக்குதல், உபகரணங்கள் பராமரிப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் போன்ற செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 14 ஆம் திகதிய SJ/2/A/153/PE ஆம் இலக்க தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் கூட்டிணைப்பு உத்தியோகத்தர் மற்றும் உதவி நூலகர் ஆகிய பதவிகளுக்காக கல்விக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாத போதிலும், நிறுவகத்தின் உதவி நூலகருக்கும் கூட்டிணைப்பு உத்தியோகத்தருக்கும் 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 232,742 தொகையும் அதற்கு முன்னைய ஆண்டிற்காக ரூபா 1,270,243 தொகையுமாக மொத்தம் ரூபா 1,502,985 ஆன கல்விக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 123,574,650 ஆன ஆராய்ச்சி உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(இ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 267,350,094 பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தீக் காப்புறுதியின் கீழ் ரூபா 344,057 பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் நிறுவகத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் சரியான மதிப்பீட்டுப் பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்குமாக 2007 ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதி முன்மொழிவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்ததுடன், ஒவ்வொரு ஆண்டுகளிலும் காப்புறுதிப் பெறுமானம் நிறுவகத்தின் முகாமைத்துவத்தின் விருப்பின் பேரில் நிறுவகத்தின் பங்களிப்பு, உத்தியோகத்தர்களின் பங்களிப்பிற்கு மேற்பட்ட சதவீதத்தை கொண்டிருந்தது. 02 ஆண்டுகளுக்குரிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | காப்புறுதிப் பெறுமானம் | காப்புறுதித் தவணைப் பெறுமானம் | | | |
|---|---|---|---|---|---|
| | | நிறுவகத்தின் பங்களிப்பு | | உத்தியோகத்தர்களின் பங ˙களிப்பு | |
| | ரூபா | ரூபா | % | ரூபா | % |
| 2012 | 525,302 | 400,000 | 76 | 125,302 | 24 |
| 2011 | 514,750 | 500,000 | 97 | 14,750 | 3 |

(உ) நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஜனாதிபதி செயலகத்தின் மூலம் அதன் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், 2010 ஏப்ரல் 30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் அதன் நடவடிக்கைகள் தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தன. அத்தகைய மாற்றத்திற்கு இணங்கும் வகையில் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதும் நிறுவகத்திற்கு 2011 ஆகஸ்ட் 31 ஆம் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டிருந்த ரைசோபியம் செயற்திட்டத்தின் கீழ் சோயா போஞ்சிக்கான பசளை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டதன் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 1,041,300 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவகத்தினால் 17 ஆராய்ச்சித் துறைகளுக்குரிய உள்நாட்டு ஆராய்ச்சிகளுக்கு அடிப்படை கற்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஒவ்வொரு துறைகளுக்கும் உரிய ஆராய்ச்சி முன்மொழிவுகளின் பிரகாரம் ஆராய்ச்சிகளின் முடிவின் போது முடிவுகளை மேற்கொள்வதற்கும் அம்முடிவுகளின் பிரகாரம் தீர்மானங்களை எடுப்பதற்கும் இயலுமாக இருக்க வேண்டும். அந்த துறைகளுக்காக 19 ஆராய்ச்சி விஞ்ஞானிகளை ஆட்சேர்த்து அவர்களுக்காக 2012 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 38,982,892 செலுத்தப்பட்டிருந்த போதும், இலங்கை மக்களுக்காக ஆராய்ச்சிகள் மூலம் முடிவுகளுக்கு வருதல் மற்றும் தீர்மானம் எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 ஆய்வுச் செயற்திட்ட துறைகளுக்குரிய 06 விஞ்ஞானிகளுக்காக ஒரே காலப்பகுதியில் சம்பளமாக ரூபா 8,851,555 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்விஞ்ஞானிகள் தனித்தனியாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடு தொடர்பாக தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) - 80 Freezer என்ற பெயருடைய உபகரணம் முறையான கொள்வனவு நடைமுறையொன்று இல்லாது 2011 ஏப்ரல் மாதம் ரூபா 1,745,305 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணம் ஒழுங்கான செயற்பாட்டு நிலைமையில் இல்லாமையால் வழங்குனர்களால் அதன் பெறுதியில் ரூபா 1,366,835 தொகை மாத்திரம் 2012 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு மீளச் செலுத்தப்பட்டிந்தது. இதன் காரணமாக ரூபா 378,470 ஆன நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந்நட்டத்தை நி.பி 156 இன் பிரகாரம் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூபா 12,000,000 ஆன நிதிஏற்பாட்டின் அடிப்படையில் வடமத்திய மாகாணத்தில் 10 நீர் சுத்திகரிப்பு அலகுகளை தாபிப்பதற்காக நிறுவகத்திற்கு நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.2 பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொள்ளாமலும் முறையான அங்கீகாரமொன்று இல்லாமலும் அதில் 08 நீர் சுத்திகரிப்பு அலகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதில் மிகுதி 02 சுத்திகரிப்பு அலகுகள் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன், அதற்குரிய ரூபா 2,400,000 தொகையை நிதியத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீரின் தரம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வொன்றிற்காக தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (தொழிநுட்ப பரிமாற்றம்) 2012 சனவரி 16 ஆம் திகதிய STD/3/67VO/11 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ரூபா 77,000 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன், நிறுவகத்தின் மூலம் அதற்காக ரூபா 316,046 தொகை செலவிடப்பட்டு மேற்குறித்த செயலமர்வு நடாத்தப்பட்டிந்தது. இதன் பிரகாரம் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் இல்லாமல் கிடைத்த தொகையை மிகைத்து ரூபா 239,046 தொகை நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு இடையே விஞ்ஞான அறிவை விரிவுபடுத்தும் செயலமர்விற்காக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து எஞ்சிய ரூபா 539,486 தொகையினை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் விதுகிரண என்ற செயற்திட்டக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்து.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 ஏப்ரல் 11 ஆம் திகதிய DMS/E2/62/7/277 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 14 தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளையும் 15 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளையும் கொண்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 12 சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்காகவும் 03 சிரேஷ்ட பதவிநிலைத் தர பதவிகளுக்காகவும் 04 சிரேஷ்ட பதவிநிலைத்தர உதவியாளர் பதவிகளுக்காகவும் கூடுதலான சம்பள அளவு அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அடிப்படைக் கற்கைகள் நிறுவகத்தின் செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், விண்ணப்பத்தை பொறுப்பேற்கும் இறுதித்திகதியில் 50 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2012 ஏப்ரல் 07 ஆம் திகதி 50 வயதைத் தாண்டிய நபர் ஒருவர் செயலாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 290,140 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நீரின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 25 சதவீதப் படி வேலை ஆரம்பிப்பு முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 06 சுத்திகரிப்பு அலகுகளுக்காக 389 சதவீதமான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உரிய எல்லையை மிகைத்து வழங்கப்பட்டிருந்த முற்பணத்தின் பெறுமதி ரூபா 5,201,000 ஆக இருந்தது.

## 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 49,382,082 பெறுமதியான 32 நிலையான சொத்து அலகுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டதுடன், அந்த உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கு அல்லது பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றாத காரணத்தால் செயற்பாடற்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ரூபா 11,757 பெறுமதியான காலாவதியான மற்றும் ரூபா 688,004 பெறுமதியான பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 118 இரசாயனப் பொருள் உருப்படிகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) ரூபா 1,126,509 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்பு உபகரணமொன்றை பயனுள்ள வகையில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை.

(ஈ) இளைய ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக 2006 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1229 கண்ணாடிப் பொருள் உருப்படிகள் அச்செயற்திட்டத்திற்கு அல்லது வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(உ) 2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலிருந்து காணப்படும் 08 ஆராய்ச்சி நிதியங்களுக்குரிய ரூபா 891,250 ஆன மீதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------

தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சரின் கூட்டிணைப்பு செயலாளரின் 2011 பெப்ரவரி 01 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அந்த அமைச்சு அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவை புரிந்த iii ஆம் தரத்தின் அமைய தட்டெழுத்தாளர் பதவியின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அடிப்படைக் கற்கை நெறிகள் நிறுவகத்திற்கு எவ்வித சேவையொன்றையும் பெற்றுக்கொள்ளாமல் அத்திகதியிலிருந்து 2012 ஒக்தோபர் மாதம் வரையில் ரூபா 489,856 சம்பளம் நிறுவகத்தின் செலவினத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதில் அடங்கியுள்ள மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 244,565 ஆக இருந்ததுடன், இதன் காரணமாக தற்காலிக சம்பளச் செலவினம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

--------------------------------------------------

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 542,600 பெறுமதியான 161 சொத்து உருப்படிகள் காணாமல் போயிருந்ததுடன், ரூபா 17,115 பெறுமதியான 10 சொத்து உருப்படிகள் அழிவடைந்திருந்தன.

### 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 04 நிர்மாணங்களுக்காக கட்டிடத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட முற்பணங்களைப் பயன்படுத்தி நிர்மாணங்களை பூர்த்தி செய்து உரிய கட்டிடங்கள் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அற்குரித்தாக 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை காணப்பட்ட ரூபா 1,352,831 ஆன முற்பண மீதிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் முறையற்ற விதத்தில் தொடர்ந்தும் முற்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் அம்பாறை, புத்தளம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வெந்நீர் ஊற்றுக்களை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,097,478 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.8 பதவியணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பதவிகளுக்காக 06 பயிலுனர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சிக் காலத்தின் பின்னர் 2009 முதல் 2013 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அவர்களை பயிலுனர்களாக சேவையில் ஈடுபடுத்தி ரூபா 1,466,283 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆய்வுகூட உதவியாளர் பதவியில் சேவை புரிகின்ற உத்தியோகத்தர் ஒருவர் 1998 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பில் அமைந்துள்ள அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அவரின் நிரந்தர பதவிக்குரித்தான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், மீளாய்வாண்டின் போது அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 4,055,703 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தாகாத 03 வெளியக விஞ்ஞானிகள் முறையான அங்கீகாரம் இல்லாது சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அவர்கள் நாளொன்றிற்கு அரை நாள் வீதம் சேவை புரிந்திருந்த போதும் முழுநாளும் சேவை புரிந்ததாகக் கருதி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 857,828 சம்பளமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்காக முறையான அங்கீகாரமொன்றினைப் பெற்றுக் கொள்ளாமல் பிரதிக் கணக்காளர் மற்றும் உதவி நூலகர் ஆகிய பதவிகள் உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,119,251 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**4.9 வாகனப் பயன்பாடு**

**வாகனத்திற்கான வாடகைக் கொடுப்பனவு**

2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(3) ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கடமைகளுக்காக ரூபா 40,000 மாதந்த வாடகை எல்லையின் கீழ் வாகனமொன்று பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும், அதற்கு முரணாக 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் அந்த எல்லையை மிகைத்து ரூபா 49,900 வீதம் வாகன வாடகை செலுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 118,800 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத் திட்டம் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக்குறைந்தது 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2012 – 2015 காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், 20 துறைகளை மேவுகை செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 03 துறைகள் மாத்திரம் மேவுகை செய்யப்பட்டிருந்தன.

### 5.3 முகாமைத்துவ சபை

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறை முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய கீழே காண்பிக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாதத்திற்குரிய செயற்பாட்டு அறிக்கை

(ஆ) மாதத்திற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று

(இ) திரவ நிலைமையும் கடன் எடுப்பனவும்

(ஈ) மாதத்தினுள் நடைமுறையல்லாத சொத்துக்கள் கொள்வனவும் பெறுகை நடவடிக்கைகளும்

(உ) புதிய ஆட்சேர்ப்பும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான கூற்றும்

## 5.4 கொள்வனவுத் திட்டம்

வேலைகள் மற்றும் சேவைகள் தொடர்பான அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம், நிறுவகத்திற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 38,734,065 ஆன வேலைகள் மற்றும் சேவைகள் ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த பாதீட்டு அறிக்கை கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் நீண்டகால நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலும் ஆண்டின் ஆரம்பத்தின் போது நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலுமான ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டிய போதிலும், 03 செலவின விடயங்களுக்கு ரூபா 20,237,526 ஆன குறை ஒதுக்கீடும் 11 செலவின விடயங்களுக்கு ரூபா 5,504,733 மிகை ஒதுக்கீடும் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 400,000 ஆன முழுத்தொகையும் எஞ்சியிருந்தன. அதன் பிரகாரம், பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் பணிப்பாளருக்கு அவ்வப்போது எனது அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) மனித வள முகாமை
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

ஒப்பம் : எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி